Registered as a News paper பக்கங்கள் - 08 விலை - ரூபா 07

# ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்

Eezhanatham

நாதம் 01 திருவள்ளுவர் ஆண்டு 2035 ஐப்பசி 20 05.11.2004 வெள்ளிக்கிழமை ஓசை 159

மின்னியல், இலத்திரனியல்
உபகரணங்கள் பெறுவதற்கு OR
பழுதுபார்க்க, பாடல்கள், படங்கள், ஒலி, ஒளி
நாடா, இசை தட்டுக்கள் பெறுவதற்கு நாட
வேண்டிய இடம்
T.V.R. ELECTRONIC'S
NO 88/1
DOCTOR LANE
KALUWANCHIKUDI.
காட்சியறை
T.V.R SONY SHOW ROOM
பிரதான வீதி,
(மக்கள் வங்கி அருகாமை)
களுவாஞ்சிகுடி

# பாதுகாப்பு உடன்படிக்கை குறித்து சந்திரிகா-மன்மோகன்சிங் ஆராய்வு!



(நமது நிருபர்)

**இந்திய-சிறிலங்கா பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் குறித்து சிறிலங்கா ஜனாதிபதி-இந்திய பிரதமர், மற்றும் வெளியுறவு அமைச்சருடன் விரிவாக பேச்சுக்கள் நடத்தியுள்ளதாக புதுடில்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

உத்தியோகப்பூர்வ விஜயத்தை மேற்கொண்டு இந்தியா சென்றிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, இந்திய பிரதமர் மன்மோகன் சிங், இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வன்சிங் ஆகியோரைத் தனித்தனியாக சந்தித்து பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

இப் பேச்சுக்களின் போது சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் ஏற்படும் தாமதம், நோர்வேயின் அனுசரணைப் பணி குறித்தும் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட போதும் இந்தியாவும் சிறிலங்காவும் செய்து கொள்ளவுள்ள பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை குறித்து பேச்சே முக்கியமாக ஆராயப்பட்டதாகவும் இது விரைவில்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## முன்னாள் புளொட் உறுப்பினர் கொழும்பில் சுட்டுக்கொலை!

(நமது நிருபர்)

கொழும்பு மாநகரத்திற்கு வெளியே தெஹிவளை சந்தியில் முன்னாள் புளொட் உறுப்பினரொருவர் இனந்தெரியாத நபர்களினால் நேற்றிரவுச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இவருடன் வந்திருந்த அவரது நண்பர் எனக் கூறப்படும் நபரொருவரும் காயமடைந்து களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தேநீர் கடையொன்றில் தேனீர் அருந்திவிட்டு வெளியே வந்த சமயம் எதிர்கொண்ட துப்பாக்கிதாரியொருவர் இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டு தப்பிச சென்றுள்ளார். 9 மில்லி மீற்றர் பிஸ்டல் இந்த கொலைக்கு பயன்படுத்தப் பட்டுள்ளதாக தெஹிவளை பொலிசார் கூறியுள்ளார்கள்.

## இலங்கை இந்திய படைத்துறை ஒப்பந்தம் தமிழ் மக்களை பீதிக்குள்ளாக்கும் செயல்

### மலையக மக்கள் முன்னணித் தலைவர் பி.சந்திரசேகரன்

(நமது நிருபர்)

இலங்கைக்கும் இந்தியாவிற்கு மிடையில் பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளதென்ற செய்தி ஏற்கனவே யுத்த பீதியில் வாடுகின்ற சிறுபான்மை மக்களின் கவனத்தை ஈர்க்கும் செயலாகவுள்ளதென்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெரியசாமி சந்திரசேகரன் புதுடில்லியில் இருந்து வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சமபலத்தில் இருந்து கொண்டு பேச்சுவார்த்தை மேசைக்கு வருவதற்கு விடுதலைப் புலிகள் சம்மதம் தெரிவித்துள்ள இந்த காலகட்டத்திலும் இலங்கை அரசு சமாதான பேச்சுவார்த்தையை பிற்போட்டு வருகின்ற சூழலிலும், இலங்கை இராணுவத்தை பலப்படுத்தும் வகையில், இந்த பாதுகாப்பு ஒப்பந்தம் அமைந்துவிடுமோ என்ற அச்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## மோசமான நிலையில் அரபாத்தின் உடல் நிலை

(நமது நிருபர்)

பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் அமைந்துள்ள மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் முக்கிய வைத்தியர்களால் கண்காணிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் பாலஸ்தீனத் தலைவர் யாசிர் அராபாத் தற்போது சுயநினைவை இழந்துள்ளதாகத் தெரியவருகிறது.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)



## மட்டு. அம்பாறை மாவட்டங்களில் மாவீரர் துயிலுமில்லங்கள் அழகுபடுத்தப்படுகின்றன

(நமது நிருபர்)

மட்டு. அம்பாறை மாவட்டங்களில் மாவீரர் தினத்தை இம்முறை வெகு சிறப்பாக அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதனையொட்டி மட்டக்களப்பு மாவட்டத்தில் தரவை. தாண்டியடி, வாகரை கண்டலடி மாவீரர் துயிலுமில்லங்களும், அம்பாறை மாவட்டத்தின் கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலுமில்லமும் சிரமதானப் பணி மூலம் துப்பரவுச் செய்யப்பட்டு அழகுப்படுத்தப்படுகின்றன.

பொதுமக்கள், மாணவர்கள், பொது அமைப்புக்கள், போராளிகள் என நூற்றுக்கணக்கானோர் சென்று சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## பாடசாலை சென்று இந்து கல்லூரி மாணவன் வீடு திரும்பவில்லை

மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் ஆறாம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவன் ஒருவன் பாடசாலைக்குச் சென்று இதுவரை வீடு திரும்பவில்லை என பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அம்பிளாந்துறையைச் சேர்ந்த புண்ணியமூர்த்தி திலக்சன் எனும் (12) மாணவனே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)



## காத்தான்குடியில் அமைதியை ஏற்படுத்த முயற்சி விட்டுக்கொடுப்பு இல்லாததால் பதட்டம் நீடிப்பு

(நமது நிருபர்)

காத்தான்குடியில் மார்க்க ரீதியான பிணக்கினைத் தீர்த்து ஒரு சுமூக நிலையை ஏற்படுத்த ஜம்மியத்துல் உலைமா சபையினர் அகில இலங்கை மெய்ஞான பேரவையினருடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும் இதுவரை சுமுக நிலை எட்டப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் ஏ.எச்.எம். பளில் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

இரண்டு கட்டமாக இருதரப்பினரையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியபோதும் இரு தரப்பினரும் விதித்த கோரிக்கைகள் காரணமாக பொது இணக்கப்பாட்டுக்கு வரவில்லை.

இதேவேளை நேற்றிரவு 10.00 மணிக்கு மற்றொரு பேச்சுவார்த்தை நடைபெற்றதாகவும் அதிகாலை வரை நடைபெற்ற பேச்சுக்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## செங்கலடி ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது நேற்று மாலை கைக்குண்டு வீச்சு!

(நமது நிருபர்)

மட்டக்களப்பு செங்கலடி ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது நேற்று மாலை இனந்தெரியாத நபர்களினால் கிரனைட் வீச்சு மற்றும் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற பயணிகள் பஸ் வண்டியொன்றில் பயணம் செய்த நபரொருவர் பஸ்சிற்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## கிழக்கு பல்கலைகழக வகுப்புக்கள் ஆரம்பம்

(நமது நிருபர்)

கிழக்குப் பல்கலைக்கழத்தில் கலை கலாசார பீடத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்புக்கு பதிவு செய்துள்ள மாணவர்களுக்கான அறிமுக வகுப்புக்கள் நாளை நவம்பர் 6ம் திகதி சனிக்கிழமை மற்றும் 7ம் திகதி

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## இன்றைய நாளில்

### தகவற்துளி

1000 ஆண்டுகளுக்கு முன் பூமியில் தோன்றிய யானையானது உலகிலுள்ள விலங்குகளுள் பெரியது. பிறந்த உடன் இதன் நிறை 100-120 கி.கிராம் ஆகும். பிறந்து முதல் 10 வருடங்களுக்கு தாயுடன் குட்டி வாழும். வளர்ந்த யானை 5.4 தொன் நிறைவுடையது.

## செய்தித் துளிகள்

### மக்கள் விசனம்

(நமது நிருபர்)

அண்மையில் பவ்ரல் அமைப்பினால் கொழும்பில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் கலந்து கொள்வதற்காகச் சென்ற வடகிழக்கு மாகாண போட்டியாளர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் பாரபட்சமற்ற முறையில் நடாத்தப்பட்டதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இவர்கள் அங்கு நின்ற வேளை தங்குமிட வசதி, உணவு, நீர் இன்மையால் பெரும் சிரமப்பட்டதாகவும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் சகல வசதிகளையும் கொண்டிருந்ததாகவும், சிலபாடசாலைகளுக்கு அதேபாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர்கள் நடுவர்களாக கடமையாற்றியதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

### இடமாற்றம்

(எஸ்.ரவீந்திரன்)

களுவாஞ்சிகுடி நவகிரிப் பிரிவு நீர்ப்பாசனப் பொறியிலாளர் சுப்பிரமணியம் திருகோணமலை மாவட்ட கோமரசன் கடவல எனும் பிரிவுக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மொனராகலையில் கடமை புரியும் எம்.ரி.வி.யபாறுல்லா களுவாஞ்சிகுடி நவகிரிப் பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். என நீர்ப்பாசனத் திணைக்கள தலைமை அலுவலகம் தெரிவித்துள்ளது

### நியமனம் வழங்கல்

(எஸ்.சசி)

வடகிழக்கு மாகாண சபையினரால் பாடசாலைகளில் காணப்படும் அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை ஏற்கனவே நடாத்தப்பட்டது. இதில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களுக்கான அதிபர் நியமனம் இன்று 05.11.2004 வழங்கப்பட இருக்கின்றது என்று மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் எம்-பவளகாந்தன் தெரிவித்தார்.

இதன் மூலம் பாடசாலைகளில் தற்காலிகமாகக் காணப்படும் அதிபர்களின் இடத்தில் நிரந்தர அதிபர் நியமனம் செய்ய இருப்பதோடு பாடசாலைகளில் அதிபர் இல்லை என்ற குறைபாட்டையும் நீக்கிப் பாடசாலையின் நிருவாகப்பணியினை திருப்திகரமாக கொண்டு செல்லமுடியும் என்று மேலும் அவர் குறிப்பிட்டார்.

### வைத்தியசாலை திறப்பு

(எஸ்.சசி)

மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் புதுமண்டபத்தடி கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கிராமிய வைத்தியசாலை இன்று திறந்து வைக்கப்பட உள்ளதாக வடகிழக்கு சுகாதாரசேவைப்பணிப்பாளர் எஸ். குமாரவேல்பிள்ளை தெரிவித்தார்.

இவ்வைத்தியசாலை நெக்கோட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் 110 இலட்ச ரூபாய் செலவில் 24 கட்டில் வசதியுடன் ஆண்,பெண் விடுதிகளும் வைத்தியர்களின் விடுதிகளும் அடங்கிய இந்த வைத்தியசாலை திறப்பு விழாவில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ள இருக்கின்றார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### மக்கள் கவலை

(நமது நிருபர்)

அண்மையில் கல்வியமைச்சினால் கேட்கப்பட்டிருந்த தொண்டர் ஆசிரியர் விபரத்தில் பாடசாலை அதிபர்கள் முன்பு செய்த ஊழல்கள் போன்று தற்போதும் செய்து வருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சேவை புரியாத நபர்களை புதிதாக தொண்டர் ஆசிரியர் என்று அதிபர்கள் சில பாடசாலைகளில் இருந்து அனுப்பி இருக்கின்றார். இது மட்டக்களப்பு வலயம், பட்டிப்பளை வலயம் ஆகிய வலயங்களில் நடைபெற்று இருக்கின்றது. இதனால் உண்மையாகவே சேவை செய்யத் தொண்டர் ஆசிரியர்கள் நியமனத்தில் விடுபடவும் சந்தர்ப்பம் இருக்கின்றது. இதுபோன்ற தவறுகளை அதிபர்கள் எதிர்வரும் காலத்தில் செய்யாது இருக்குமாறு கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

# நீங்கள் சொல்லிக் கொள்ளும் பிரதேச பற்று வெறும் வெற்று வேட்டு

## - கருணாவிற்கு முன்னாள் போராளி மடல் -

**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட கருணாவுக்கு முன்னாள் போராளி ஒருவர் மடல் வரைந்திருக்கிறார். இந்த மடல் தமிழ் நாதம் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதன் முழுவிபரமும் வருமாறு:-**

மேலுமொரு கடிதம் எழுத சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி.

போன கடிதத்தை நான் எழுதியதற்கு என் சுயநலனே முக்கிய காரணம். என் மனதை அரித்துக்கொண்டிருக்கும் பல சுமைகளுக்கு வடிகால் தேடவேண்டிய கட்டாயம் எனக்கிருந்தது. என் மனச்சாட்சிக்கு நான் ஏதாவது பதில் சொல்லியாக வேண்டியிருந்தது. அஞ்ஞாதவாசம் செய்வதால் என் மனவுணர்வுகளைப் பகிர்ந்துகொண்டு ஆறுதல்பெற என்னருகே என் மொழி தெரிந்த நண்பர்கள் இல்லை. ஆனால், என் மடலுக்கு உலகெங்கிலும் இருந்து வந்த பதில் கடிதங்களைக் கண்டபோது பெரும் ஆறுதலாக இருந்தது. குறிப்பாகத் தாயகத்தில் இருந்து வந்த கடிதங்கள் என்னைத் தெம்பூட்டின. என் தவறை நான் உணர்ந்த கணமே தமிழன்னை என்னை மன்னித்துவிட்டாள் என்ற அந்த ஒரு கடிதம் போதும். என் சாவு நிம்மதியானதாக இருக்கும். உங்களுக்கும் எத்தனையோ வாய்ப்புகள் கிடைத்தன. ஆனால், அதை உணர்ந்துகொள்ள முடியாத படி உன்மத்தம் உங்கள் அறிவை புறந்தள்ளிற்று.

உங்களின் பாணியில் அமைந்த பதில் கடிதங்களும் சில வந்திருந்தன. அவற்றின் சொற்பிரயோகங்களில் எல்லாம் உங்கள் பாரம்பரிய நெடிகலந்த 'அந்த' ரகமான வார்த்தைகள். கைக்கெட்டாத தொலைவிலிருப்பவர்களை அச்சமூட்ட நீங்கள் கடைப்பிடிக்கும் வழக்கமான உத்தி அது என்று எனக்குத் தெரியாதா? உங்களின் செயற்பாடுக்ளின் தரம் தாழ்ந்துகொண்டே போகும்போது ஒரு தமிழன் என்று நினைத்து உங்களுக்காகத் துயரப்படுகின்றேன். ஆனால் உங்களின் உண்மையான அடிப்படைகள் என்ன என்பது எம் மக்களுக்குத் தெரியாமல் போகக்கூடாது. பேரினவாத கட்சிகளுக்கு வால்பிடித்து வளர்ந்ததே உங்கள் பரம்பரை என்பதை ஊரறியும். இனி உலகும் அறிந்து கொள்ளும். யு.என்.பி. கட்சியின் உள்ளூர் பிரமுகரான உங்கள் மாமனாரின் செல்வாக்கில் சகோதரிகள் தொழில் பெற்று கொஞ்சம் கொஞ்சமாக நிமிர்ந்தது உங்களின் குடும்பம். அந்த நன்றிக்கடன்களின் சாயல் உங்களின் முற்காலச் செயற்பாட்டில் அவ்வப்போது தொனித்ததைப் பலர் கவனிக்காது விட்டிருக்கலாம். பின்பு அதே மாமனார், கூட்டமைப்பு வேட்பாளர் பட்டியலில் பாராளுமன்ற உறுப்பினருக்கு அடுத்த நிலையில் இருந்ததையும் பலர் மறந்திருக்கலாம். நான் எப்படி மறப்பது?

சூறாவளிக்கு முன்பு இரண்டு நேரப் பாடசாலை நடந்த காலத்தில் மதிய உணவிற்காக நீங்கள் எல்லோரும் வீட்டுக்கு வருவீர்கள். உங்கள் அண்ணனும் அப்போது சிறியவாராகவே இருந்தார். பசி உங்கள வயிற்றைக் கிள்ளும். வேட்டைத்தொழில் செய்துவந்த உங்களின் தகப்பனார் நல்ல உழைப்பாளிதான். இருந்தாலும் அவருக்கு எப்போதுமே வேட்டை கிடைத்து விடாது. உங்களின் பசி பொறுக்காத சகோதரி தென்னை மரத்தில் ஏறி இளநீர் பிடுங்குவார். ஆளுக்கொன்றாக குடித்து வழுக்கல், கயறு என்பவற்றையும் சாப்பிட்டுவிட்டு எல்லோரும் பின்னேரப் பள்ளிக்குப் போவீர்கள். இரவு நேரச் சமையல் கூட அளவுச்சாப்பாடாக இருக்கும். பாத்திரத்தில் இருக்கும் உணவு போதாது என்று எத்தனை நாள் தட்டை எறிந்திருப்பீர்கள். அப்போது உங்கள் அம்மா நினைத்திருப்பாரா என் வீட்டில் ஒரு துரோகி வளர்கிறான் என்று? பரிவாகத்தானே உங்களை வளர்த்தார்கள். இந்தத் தமிழ்ச் சமூகம் உங்களுக்கு என்ன கெடுதல் செய்தது? 'முரளி' என்ற பெயரை உச்சரிக்க முடியாமல் 'முதலி' என்று அழைத்த உங்களின் பாட்டி, உண்மையிலேயே நீங்கள் ஒரு சுயநல முதலை என்பதை அன்றே அறிந்திருந்தாளோ?

உங்களின் இப்போதைய அடாவடிச் சுபாவத்தின் அடிப்படையை என்னால் நன்றாகப் புரிந்துகொள்ள முடிகிறது. கொலைகளும் அடிதடிகளும் விசங்கேணிக்குப் புதிதல்ல. உங்களின் தகப்பனார் குடிவெறியில் ஏற்பட்ட அடிதடியில் உள்ளங்கையில் கத்திக்குத்து வாங்கி வலது சுட்டுவிரலை இன்றுவரை மடக்க முடியாது இருப்பவர். உங்களின் சகோதரியொருவர் இஸ்லாமியர் ஒருவரை மணந்து இஸ்லாமிய சமயத்தைக் கைக்கொண்டிருப்பவர். இந்து கிறிஸ்தவப் பிரச்சினையால் உங்களின் நெருங்கிய உறவுகளுக்கிடையில் ஏற்பட்ட தகராறில் வேட்டைக்குப் போவதாக அழைக்கப்பட்டு நஞ்சுச் சாராயம் கொடுத்து ஒருவர் கொல்லப்பட்டவர். இன்னுமொருவர் பாலியல் தொடர்பான பிணக்கொன்றில் தொண்ணூறுகளின் ஆரம்பப்பகுதியில் தலையில் அடித்துக் கொல்லப்பட்டவர். இந்தப் பின்னணியைக் கொண்ட உங்களிடம் தயவு தாட்சணியத்தை எதிர்பார்ப்பது உண்மையிலேயே மடவேலை. ஏன்னம்மான் நஞ்சூட்டப்பட்ட கள்ளை நீங்கள் திருடிக்குடித்து மயிரிழையில் உயிர்தப்பிய அந்தச் சம்பவத்தை இன்னும் மறந்திருக்க மாட்டீர்கள். தாங்கள் என்றும் வெளியில் கூறாத, கூறவிரும்பாத அனேகர் அறியாத உங்கள் அடிப்படைகள் அரங்கேறுகின்றன என்று அவதியுறுகிறீர்களா? (நஞ்சென்றவுடன் இன்னும் ஒரு சம்பவம் சட்டென ஞாபகத்துக்கு வருகிறது. உங்கள் மனைவியின் வாகனத்தில் கட்டுக்கட்டாக இலட்சக் கணக்கில் காசைக் கண்டேன். என்று கூறியதற்காக மீனகத்தில் உங்களால் நஞ்சூட்டி கொல்லப்பட்ட எம் நண்பன் ரஞ்சனை எப்படி மறக்க முடியும்? எத்தனை களங்கள், எத்தனை விழுப்புண்கள்...) இந்தளவு அதீத பின்னணியில் இருந்த உங்களைச் சாக்கடையில் இருந்து எடுத்தது போல எடுத்து வளர்த்தது யாரென்பது நீங்கள் மூடிமூடிப் பொத்தினாலும் எல்லோருக்கும் தெரியும். நீங்கள் சொல்லிக்கொள்ளும் பிரதேசப் பற்று என்பது வெறும் வெற்றுவேட்டு என்பதும் எல்லோருக்கும் புரியும். இன்று நீங்கள் சொல்வதாகச் சொல்லப்படும் வெளியிடப்படும் விடயங்களில் உங்களுடையது எது அல்லாதது எது என்பதை நான் நன்றாக அறிவேன். அண்மையில் மட்டக்களப்பு நகரில் சீருடையணிந்தவர்கள் விநியோகித்ததாம் என்று ஒரு துண்டுப்பிரசுரத்தை நண்பனொருவன் மின்னஞ்சல் நகலில் அனுப்பியிருந்தான். எழுத்துப் பிழைகளோடு சேர்த்து தகவல் பிழைகளும் கொண்ட அந்தத் துண்டுப் பிரசுரம் உங்களின் சார்பில் ஏரிக்கரை வீதி என்ற விலாசத்தில் வெளியாகியிருந்தது. ரமேசண்ணனுக்கு பெண் பார்த்துக் கட்டிவைத்தது நீங்கள் தான் என்பது எல்லாருக்கும் தெரியும். அப்படியிருக்க ரமேசண்ணனின் மனைவி சூசையண்ணனுக்குச் சகோதரி என்று சொதப்பும் அளவிற்கு நீங்கள் மக்கன் அல்ல என்பதும் தெரியும். மூன்றாந்தரப் பிரச்சாரங்கள் எல்லாம் உங்களின் பெயர் தாங்கிவருகின்றன. நீங்கள் நாலாந்தரம் ஆகிவிட்ட பின்னர் எது எப்படி வந்தாலும் உங்களுக்கு என்ன. உங்களையே நீங்கள் விற்றுவிட்ட பின்பு. எத்தனையோ மணிநேரம் உங்களுக்காகக் காவல் நின்றிருக்கிறேன். அப்போது நான் தாங்கி நின்றது ஆயுதத்தை மட்டு மல்ல. உங்கள் மேல் உள்ள பயபக்தியையும்தான். என்னைப் போன்ற எத்தனை மனங்களை நொருக்கிவிட்டீர்கள் அம்மான்.

உங்களிடம் இருந்தது வீரமா? முரட்டுத்தனமா? என்ற சந்தேகம் எனக்கு எப்போதுமே இருந்தது. அதற்குக்காரணம் இந்திய ஆக்கிரமிப்புக் காலத்தில் நடந்த ஒரு சம்பவம். காட்டிற்குள்ளால் நகர்ந்து கொண்டிருந்தபோது திடீரென்று ஒரு கரடி உங்கள் எம்-16 ரைபிளைப் பிடித்துவிகிறது. வெலவெலத்துப்போன நீங்கள் ரைபிளை அப்படியே விட்டுவிட்டுத் தப்பியோட மற்றப் போராளிகள் அதை மீட்டுத் தருகிறார்கள். வெறும் கரடிக்கே முதுகு காட்டியதை பட்டென்று மறந்து இப்போது சிங்களக் கதிரையின் கால்களுக்கிடையில் இருந்து வீரமுழக்கம் செய்வதாக நினைத்து ஊளையிடுகிறீர்கள். வட பகுதி சமர்க்களங்களில் நீங்கள் காட்டிய 'வீரம்' பற்றி சிலர் சிலாகித்து கூறும் போதெல்லாம் அன்று என்னால் எனக்கு சிரிக்க மட்டுமே முடிந்தது. பூநகரி சண்டையைத் தவிர நீங்கள் சமர் முன்னணியில் நின்ற ஒரு சண்டையையாவது தங்களால் கூற இயலுமா? ஜெயசிக்குறு எதிர் நடவடிக்கையைத் தவிர நீங்கள் வட பகுதியில் எங்கு படை நடத்தினீர்கள் என இயம்பலாமா? (இதற்குள்ளும் நிகழ்ந்த எத்தனையோ 'அற்புதங்கள்' நான் அறிவேன்.)

என்போல வெளிநாட்டில் இருக்கும் ஒரு முன்னாள் போராளி எனக்கு எழுதிய பதில் கடிதத்தில் 'கொஞ்சம் முந்தி வந்து விட்டேன். இல்லாவிட்டால் அவனைத் தொலைத்திருப்பேன்' என்று [illegible]தியிருந்தார். அவரின் மன உணர்விற்கு தலைவணங்குகின்றேன். அதே பிழையை நானும் விட்டு விட்டேனா? செஞ்சுடர் கூட உங்களால் கொல்லப்படுவதற்கு முதல்நாள் உங்களின் தமக்கையின் வீட்டிற்குப் போனபோது அங்கே தேசத்துரோகியும் உங்களின் மைத்துனனுமான தட்சணாமூர்த்திக்கு விருந்து நடப்பதைக் கண்டு முரண்பட்டு வாக்குவாதம் செய்ததும் மீனகத்தில் பரவலாக அடிபட்ட கதை. கதை எழும்பியபோது நீங்கள் மீனகத்தில் இல்லை. மருதத்திற்குப் போய்விட்டீர்கள். மீனகத்திற்குத் திரும்பி வந்திருந்தால் பெரும்பாலும் நாட்டிற்கு நல்ல செய்தியொன்று கிடைத்திருக்கலாம்.

நீங்கள் கிளாலியில் காயப்பட்டு யாழ் வைத்தியசாலையில் இருந்ததாக வட பகுதி வைத்தியரொருவர் குறிப்பிட்டிருந்தார். தகவலில் தவறேதும் இல்லை அது முழுக்க முழுக்க உண்மை. அது சமர்க்களத்து விழுப்புன் அல்ல கட்டையொன்று காலை தாக்கியதால் வந்த காயம் பூநகரிச் சமருக்கு பின்னான நாளொன்றில் திருமால் பின்னோக்கிச் செலுத்திய நீலநிறக் கன்றறின் சில்லில் அகப்பட்ட தடியொன்று கிளம்பியடித்ததில் உங்களின் காலொன்று உடைந்து நீங்கள் படுக்கையில் கிடந்தது உண்மை. பூநகரிச் சமரில் காயப்பட்டதாக நீங்கள் சாடை மாடையாக கதைவிட்டிருப்பது தெரிகிறது. இந்தக் காயத்தையும் புலிபாய்ந்தகல்லில் நாம் இருக்கும் போது கம்பு கிழித்ததால் யேசுதாஸ் மருந்து போட்ட காயத்தையும் தவிர இயக்க வாழ்க்கையில் சிறு கீறல் கூட உங்களுக்குப்பட்டதாக எனக்கு ஞாபகமில்லை. அடடா! ஒன்றை மறந்து விட்டேன். உங்களுக்கு ஒருதடவை சூட்டுக் காயம் பட்டதுதான். ஆனால் அது துவக்கு சூடல்ல. மோட்டார் சைக்கிளின் சைலஞ்சர் சூடு. உங்கள் அருகிருந்தவர்கள் இன்னும சிலர் இருப்பதால் உங்கள் விருப்பத்திற்கு நீங்கள் கதைவிட முடியாது. இந்தக் கடிதத்தைப் பார்க்கும்போது உங்களின் சிந்தனை ஓட்டம் எப்படியிருக்கும் என்பது எனக்குத் தெரியும். பிழைகளைச் சீர்செய்வதைவிட அவைபுலப்படும் மார்க்கத்தை அடைப்பதே உங்களின் பாணி. அந்த வகையில் உங்களோடு இருந்து உங்களின் ஆழங்களை அறிந்தபின் உயிரோடு இருந்தவர்கள் மிகவும் சொற்பம் நான் இன்னும் சில கடிதங்கள் எழுதும் வரையாவது நீங்கள் நலமாக இருக்க வேண்டும் அருகிலிருந்தவன் என விரும்புகிறேன். மறுபடியும் சந்திப்போம்.

**அருகிலிருந்தவன்**

# கொக்கட்டிச்சோலையில் திறக்கப்பட்ட வங்கி மூலம் விவசாய, சுயதொழில் கடன்

(நமது நிருபர்)

சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கியின் மட்டக்களப்புக் கிளையினால் சுயதொழில் முயற்சிகளுக்காகவும், நெற்செய்கைக்கும் எண்பது வாடிக்கையாளர்களுக்கு முதற்கட்டமாக 250.000 ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழக பணிப்பாளர் கு.தேவராசா தெரிவித்தார்.

கடந்த மாதம் கொக்கட்டிச்சோலையில் திறந்து வைக்கப்பட்ட இச்சமூக பொருளாதார வங்கியில் பெரும்பாலானோர் ஆர்வமுடன் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பித்து வருகின்றனர்.

இவ்வங்கியின் மூலம் அரச வங்கிகளின் செயற்பாடுகள் குறைவாக உள்ள பல கிராமங்கள் வங்கிச் சேவையைப் பெறக் கூடியதாகவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

வங்கி ஆரம்பிக்கப்பட்டு குறுகிய காலத்திலேயே உடனடித் தேவைகளுக்காக வங்கியினால் கடன்கள் வழங்கப்பட்டதையிட்டு அப்பிரதேச மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர் என்றும் மட்டக்களப்பு தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் கு.தேவராசா ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

# அம்பிளாந்துறை வீரமுனை வீதி பல மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு

(எஸ்.ரவீந்திரன்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் மட். அம்பிளாந்துறை வீரமுனை வீதி பல மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

இதற்கமைய இவ்வீதியின் புனரமைப்பு வேலைகளை ஆரம்பிப்பதற்காகக் கட்டட ஒப்பந்தக் காரர்களிடம் ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்டத்தின் மூலம் அம்பிளாந்துறையிலிருந்து வீரமுனை வரையான வீதியே இவ்வாறு புனரமைக்கப்படவுள்ளது.

இதன் முதற் கட்டமாக அம்பிளாந்துறையிலிருந்து தாமரைப் பூ சந்தி வரை உள்ளடங்கலாக 8 கிலோ மீற்றர் வீதி புனரமைக்கப்படவுள்ளது. ஆனால் ஏற்கனவே டேபா திட்டத்தின் மூலம் தாமரைப் பூ சந்தியிலிருந்து கார்த்தியர் கடையடிச் சந்தி வரை3 கிலோமீற்றர் திருத்தப்பட்டுள்ளது. ஆகவே டேபா திட்டத்தினால் திருத்தப்பட்டுள்ள அவ்வீதியும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இத்திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டது. துரதிஷ்ட வசமானது. என பிரதேச வாசிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

# மட். மாவட்டத்தில் மீள்குடியேறிய மக்களுக்கு அடிப்படை வசதியில்லை

(எஸ்.ரவீந்திரன்)

மட். காக்காச்சி வட்டைக் கிராமத்தில் மீள் குடியேறியுள்ள மக்கள் எதுவித அடிப்படை வசதிகளுமின்றி வாழ்ந்து வருவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பிலிருந்து 41 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள காக்காச்சி வட்டைக் கிராமத்தில் கடந்த கால வன் செயலின் போது இடம் பெயர்ந்த மக்கள் தற்போதய சமாதான காலத்தில் மீண்டும் தமது சொந்தக் கிராமத்தில் குடியேறியுள்ள நிலையில் இவ்வாறு அடிப்படை வசதிகள் எதுவும் தமக்கு இதுவரை செய்து தரப்படவில்லையென கவலை தெரிவிக்கின்றனர். மொத்தம் இங்கு 247 குடும்பங்கள் மீளக் குடியேறியுள்ளனர்.

இதே போன்று பலாச்சோலைக் கிராமத்திலும் 160 குடும்பங்கள் மீள் குடியேறி அவர்களுக்கும் எதுவித அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

செங்கல் உற்பத்தி, விவசாயம், கைத்தொழில் போன்றவற்றை இவர்களது ஜீவனோபாயத் தொழிலாகக் கொண்டுள்ள இக்கிராம மக்களின் அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்படவில்லையென மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# தம்பிலுவில்மத்திய சந்தை கட்டட அடிக்கல் நாட்டு விழா

(கனன்)

தம்பிலுவில் மத்திய சந்தை கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் நண்பகல் 12.30 மணியளவில் திருக்கோவில் பிரதேச செயலாளர் ஏ.கே.தவராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் திருக்கோவில் உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.கரன் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசசபை பிரதம எழுதுனர் ரி. தங்கத்துரை மற்றும் அம்பாறை மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கே.பத்மநாதன் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டு அடிக்கல்லினை நாட்டி வைத்தனர்.

திருக்கோவில் பிரதேச செயலாளரும், வர்த்தக சங்கமும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக கிழக்கு மாகாண உட்கட்ட அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லாவின் 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் இப்பொதுச் சந்தை நிர்மானிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. மிக நீண்ட காலமாக பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கி வந்த இப் பொதுச்சந்தை இக்கட்டிடம் நிர்மானிக்கப்படுவதுடன் தம்பட்டை முதல் தாண்டியடி வரையிலான சுமார் 6000க்கும் மேற்பட்ட பொது மக்கள் வருடந் தோறும் அனுபவித்து வருகின்ற சந்தைப் படுத்தல் பிரச்சினை தீரும் எனவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

# திருக்கோவில் பிரதேசத்தில் தற்காலிய கலாசார மண்டபம்

(கணன்)

இந்து கலாசார அமைச்சின் உதவியுடன் திருக்கோவில் பிரதேசத்தில் தற்காலிய கலாசார மண்டபமொன்றை அமைப்பதற்கான நடவடிக்கையினை திருக்கோவில் பிரதேச செயலாளர் ஏ.கே.தவராஜா மேற்கொண்டு வருகின்றார். இதற்கமைய தம்பிலுவில் மத்திய மகா வித்தியா லயத்திலுள்ள மாணவர் விடுதியில் இக்கலாசார மண்டபம் தற்காலிகமாக அமையவுள்ளதாகவும் இதற்கான நிதி உதவி விரைவில் கிடைக்கப் பெறுமெனவும் பிரதேச செயலாளர் தெரிவித்தார். தமிழர்களின் கலை கலாசார விழுமியங்களை வெளிக்கொண்டுவர இவ்வாறான ஒரு நிலையம் இல்லாதது இப்பிரதேச மக்களிடத்தில் மிகுந்த கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

இவ்விடயம் சம்பந்தமாக பல அரச அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கும் எடுத்துக் கூறியும் இதுவரையும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இருந்தும் தற்போது திருக்கோவில் பிரதேச செயலாளர்கள் எடுத்துள்ள முடிவு பாராட்டத்தக்கதென மக்கள் தெவிக்கின்றனர்.

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக் கருத்தரங்கு

(நமது நிருபர்)

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட கல்வி அபிவிருத்தி பிரிவினர் தரம் 05 மாணவர்களின் நலன் கருதி முன்னோடி புலமைப்பரிசில் பரீட்சைக் கருத்தரங்கு ஒன்று நடாத்தத் திட்டமிட்டுள்ளது என்று மாவட்ட கல்வி அபிவிருத்தி சபையினர் தெரிவித்துள்ளனர்.

தரம்04 பாடப்பரப்பில் மூன்று வினாத் தாள் தரம் 05 பாடப்பரப்பில் ஏழு வினாத்தாள்களும் உள்ளடக்கியதாக பரீட்சை நடை பெறவிருக்கின்றது எனவும் இப் பரீட்சை மாத இறுதியில் வரும் சனிக்கிழமைகளில் நடை பெறவிருக்கின்றது.

இதற்கு வினாத்தாள்கள் பெறும் மாணவர்களுக்கும் கற்பிக்கும் ஆசிரியர்களும் மூன்றாம் தவணை இறுதியில் கருத்தரங்கு நடைபெற இருப்பதாகவும் சபையின் செயலாளர் சி.எம்.குமாரசாமி தெரிவித்தார்.

# உள்ளூராட்சி சபைகளுக்கான நியமன செயற்பாடுகளில் துஷ்பிரயோகம்

(விரி.சகாதேவராஜா)

மாநகரசபை, நகர சபை, பிரதேசங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிற்றூழியர் நியமனம், சேவை நீக்கும் அதிகாரங்களில் துஷ்பிரயோகம் இடம் பெற்று வருகின்றன.

எனவே அவ் அதிகாரங்களை ரத்துச் செய்து மாகாண உளளூராட்சி ஆணையாளரிடம் வழங்க வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கும் தீர்மானத்தை அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் அம்பாறைக் கிளையின் 4வது வருடாந்த பொது சம்மேளனம் நிறை வேற்றியுள்ளது.

மேற்படி வருடாந்த சம்மேளனம் கடந்த சனி க்கிழமையன்று (30.10.2004) அம்பாறைக் கச்சேரியில் சங்கத் தலைவர் எஸ். லோகநாதன் தலைமையில் நடை பெற்றது.

சங்க மாவட்ட இணைப்பாளர் நொயல் பீரிஸின் ஏற்பாட்டில் நடைபெற்ற கூட்டத்திற்கு மேலதிக அரசாங்க அதிபர் அஸங்க அபேயவர்த்தன கலந்து சிறப்பித்தார்.

# மட். சிங்காரத்தோப்பு மகா வித்தியாலய பரிசளிப்பு விழா

(கர்சனன்)

மட்.களுவன்கேணி சிங்காரத் தோப்பு சரஸ்வதி வித்தியாலய பரிசளிப்பு விழா எதிர்வரும் 8ம் திகதி திங்கட் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு அதிபர் சி.சண்முகம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி, கௌரவ அதிதிகளாக வலயக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம். ஜெயுனுதீன், சிறப்பு அதிதிகளான தேசியக் கல்வியியல் கல்லூரி பீடாதிபதி எஸ்.பாக்கியராசா, பிரதேச செயலாளர் கிரிதரன், கோட்டக்கல்வி அதிகாரி வேலுப்பிள்ளை, வேள்ட் விசன் ஏறாவூர்பற்று உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ்.அருள்நேசன் ஆகியோரும் மற்றும் விசேட அதிதிகளாக பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# இரு புதிய வைத்தியர்கள் நேற்று நியமனம்

(எஸ்.ரவீந்திரன்)

களுவாஞ்சிகுடி மாவட்ட வைத்தியசாலைக்கு மேலும் இரு புதிய வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இவ்விரு வைத்தியர்களும் நேற்று தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

களுவாஞ்சிகுடி, மாவட்ட வைத்தியசாலையில் கடந்த பல வருடங்களாக வைத்தியர் தட்டுப்பாடு நிலவி வந்தது. தற்போது நியமிக்கப்பட்டுள்ள இரு வைத்தியர்களுடன் 5 எம்.வி.வி.எஸ்.

வைத்தியர்களும் இரு பதிவு வைத்திய அதிகாரிகள் உட்பட 7பேர் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தெரிவு செய்யப்பட்ட தொண்டராசிரியர் பெயர் பட்டியலை வெளியிட வேண்டும்

(நமது நிருபர்)

தொண்டர் ஆசிரியர்களும், பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கும் பல வருடங்களாக சேவை செய்தும் அவர்களுக்கான நிரந்தர நியமனம் தொடர்பான பல முறைப்பாடுகள் எமக்குத் தெரிவிக்கின்றனர். நாங்கள் பல வருடங்களாக சேவை செய்து வருகின்றோம். தெரிவு செய்யப்பட்ட பட்டியலில் பெயர் சேர்க்கப்பட வில்லையென வருத்தம் தெரிவித்தார்கள்.

அத்துடன் இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தினர் வடகிழக்கு மாகாண கல்வி 'பண்பாட்டலுவலகங்கள் அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளன. அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு மேன்முறையீடு செய்வதற்கு வசதியாகக் கடந்த காலங்களில் தெரிவு செய்யப்பட்டோரின் பட்டியல் வெளியிடப்பட்டது. போன்று இம்முறை யும் தெரிவு செய்யப்பட்டோரின் பட்டியலை கல்வி வலயங்கள் ரீதியாகவும், கல்வி மாவட்ட ரீதியாகவும் பகிரங்கமாக வெளியிட வேண்டும்.

அதன் பிரதிகள் வட கிழக்கு மாகாண ஆளுனர், வடகிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

# மட்டக்களப்பில் மீண்டும் கடும் மழை

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முதல் மீண்டும் பெரும் மழை பெய்ய ஆரம்பித்துள்ளது.

நேற்று இரவு முதல் பெய்துவரும் மழை காரணமாக பெரும்போக நெற் காணிகள் அனைத்தும் மீண்டும் நீரில் மூழ்கியுள்ளது.

அத்துடன் மாவட்டத்தின் தாழ்ந்த பிரதேசங்கள் அனைத்தும் நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன.

அண்மைக்காலமாக தொடர்ச்சியாகப் பெய்துவந்த மழை கடந்த ஓரிரு நாட்களாக ஓய்ந்திருந்து மீண்டும் பெய்ய ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் வயிற்றோட்டம் பரவக் கூடிய அபாயம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மழையுடன் கூடிய காலநிலை காணப்படுவதால் வயிற்றோட்டம் பரவக் கூடிய அபாய நிலை இருப்பதாக மாவட்ட பிரதி சுகாதார சேவை பணிப்பாளர் டபிள்யூ வில்லிம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சில பாதுகாப்பற்ற கிணறுகளில் மழை நீருடன் கழிவுகளும் கலந்துள்ளதால் இந்த நிலை தோன்றியுள்ளது. இதன் காரணமாக நீரை சுத்தப்படுத்திய பின்னர் அருந்த வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பில் பத்து சுகாதாரப் பிரிவுகள் காணப்படுகின்றன. வெல்லாவெளி, பட்டிப்பளை, வவுணதீவு, வாகரை ஆகிய பகுதிகளில் வயிற்றோட்டம் பரவும் அபாயம் அதிகமாக உள்ளதாக பிரதிநிதி தெரிவிக்கின்றார்.

இதன் காரணமாக மக்கள் இது குறித்து அறிவுறுத்தப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலக்கியச் சுடர்

மிதுனன்

# சங்ககால சமூகமும் இலக்கியமும்

## ஒரு மீள் பார்வை

சென்றவாரத் தொடர்ச்சி....

### தொல்காப்பியர் நிலத்தைப் பிரித்தவிதம்

பொருளதிகாரத்தில் அகத்திணை யியலில் தொல்காப்பியர் பாடலுள் வரும் விட யங்களை மூன்றாகப் பிரிக்கின்றார். அவை யாவன முதற்பொருள் கருப்பொருள், உரிப் பொருள், தொல்காப்பியம் அகத்திணையியல் சூத்திரத்தில்

''முதற்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறை சிறந்தனவே
பாடலுள் பயின்றவை நாடும் காலை....."

என்பார் தொல்காப்பியர்.

இவற்றுள் உரிப்பொருளே முக்கிய மானது உரிப்பொருள் என்பது அந்நிலத்தில் நிகழும் அக ஒழுக்கமாகும். அதாவது ஆணு க்கும், பெண்ணுக்குமிடையே (தலைவன், தலைவி) வாழ்க்கைப் போக்கில் ஏற்படும் புணர்வு, பிரிவு, காத்திருப்பு, இரங்கல், ஊடல் ஆகிய மன உணர்வுகளாகும். இவ்வுரிப் பொருளைச் சிறப்பிக்கவே முதற்பொருளும், கருப் பொருளும் உதவும்.

முதற்பொருள் என்பது அந்த ஒழுக்கம் நிகழும் நிலமும், பொழுதும் ஆகும். தொல்காப்பியர் நிலத்தை காடுறை உலகம், (முல்லை) மை வரை உலகம் (குறிஞ்சி) தீம்புனல் உலகம் (மருதம்) பெருமணல் உல கம் ( நெய்தல்) என நான்கு நிலமாகப் பிரிக்கின்றார்.

பாலை நிலம் பற்றித் தொல்காப்பியர் எதுவும் கூறவில்லை. பாலை பற்றிக் கூறப் படுவது சிலப்பதிகாரத்திலே தான். சிலப்பதி காரத்தில் காடுகாண் காதையில் 60-66 வரை யுள்ள வரிகளில் பாலை நிலம் பற்றிக் கண்ண கிக்கும், கோவலனுக்கும், கவுந்தியடிகள் கூறுவதாக இளங்கோவடிகள் இவ்வாறு கூறுகின்றார்.

''கோத்தொழிலாளரொடு கொற்றவன் கோடி
வேத்தியலிழந்த விய நிலம் போல
வேனலங் கிழவனொடு வெங்கதிர் வேந்தன்
தானலம் திருகத் தன்மையிற் குன்றி
முல்லையும், குறிஞ்சியும் முறைமை யிற்றிரிந்து
நல்லியல் பிழந்து நடுங்கு துயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும"

இவ்வரிகளுக்கு ந.மு.வேங்கடசாமி நாட்டார் பின்வருமாறு உரை கூறுவார். அரசியல் தொழிலினையுடைய அமைச்சரோடு முறை செய்யாது அரசனும், செங்கோல் செலுத்தாமல் விடுவதாலேயே அரசின் இயல்பை இழந்த அகன்ற நிலத்தைப் போல வேனிலாகிய அமைச்சனொடு வெவ்விய கதிர்களையுடைய ஞாயிறாகிய அரசன் நலம் வேறுபடுதலால் தமது இயற்கை கெட்டு முல்லை குறிஞ்சியெனும் இரு திணையும் முறைமை திரிந்து தமது நல்ல இயல்புகளை இழந்து தம்மைச் சேர்ந்தோர் நடுங்கும் வண்ணம் துன்பத்தினை உறுவித்து பாலை எனப்படும் வடிவினைக் கொள்ளும்

இதன் படி வேனிற் காலத்தில் குறிஞ்சி நிலமும், முல்லை நிலமும் பாலை நிலமாக மாறுகின்றன என்பது தெரிய வருகிறது.

வேனிற் காலம் வந்ததும் (சித்திரை, வைகாசி) சூரியனுடைய வெப்பம் அதிகம் ஏற்படும். வேனிற் காலமும், சூரிய வெப்பமும் இணைய மழை ஏற்படாது. நிலம் வரளும். இந்நிலையில் செழிப்பாயிருந்த குறிஞ்சி நிலமும், பசுமை நிரம்பிய காட்டு நிலமான முல்லை நிலமும் தமது செழிப்பு, குளிர்ச்சி என்ற இயல்பினின்றும் மாறி வரட்சி மிக்க பாலை நிலமாகி விடும். இப்பாலை மறவர்க்கு துன்பம் தரும் நிலமாகும். இக்காலத்திலே தான் ஒரு குடியிருப்பிலிருந்து இன்னொரு குடியிருப்புக்கு மக்கள் செல்வர் உடன்போக்கு (பெண்ணை ஆண் கூட்டிக் கொண்டு ஓடுதல்) பொருள் வயிற்பிரிவு என்பன இக்காலத்திலே தான் நிகழும் இதனாலேயே பாலைக்குப் பிரிவு என்பது வந்தது.

(தொடரும்....)

## தீப ஒளி மனயிருளை மாற்றுமா?

-கரையூரான்-



ஈழ தேசத்தின் தீப ஒளி- மன
இருள் நீக்கச் செய்திடுமா?
இழந்து போன உரிமைகளை- மக்கள்
இதயத்தில் ஏற்றிடுமோ?

காலத்தால் ஓங்கிநின்ற எமதினம்- என்று
கலங்கரை விளக்காக ஆகிடுமோ?
ஈழவர் உள்ள மெல்லாம்- இந்த
தீபத்திருநாளில் மலர்ந்திடுமா?



சமாதானம் சறுக்கு மரமானதே- இனச்
சண்டை ஓய்ந்து ஈழமண்ணில்
சரித்தரம் படைத்திடுமா?- எங்கள்
தமிழினம் சிரித்து மகிழ்ந்திடுமோ?

## பருவகால பைத்தியம்

-கன்னிமுத்து வெல்லபதியான்-



பருவ கால
பைத்தியம்
பிடித்து விட்டது...
காதல்!

❀❀❀❀



எச்சில் பறக்க
இச்சை தீர
அவள் பெயரையே
உச்சரிக்கிறேன்!

❀❀❀❀



அவளின்
ஐ லவ் யூ வுக்காக
ஒரு தெரு நாயாக
அலைகிறேன்!

❀❀❀❀



அதனால்
அவள் வீட்டுத்
தெருவை அளக்கின்ற
ஒரு நில அளவையாளராக
இன்று நான்!

❀❀❀❀



சாப்பிட வாமனே என்று
செல்லமாக அம்மா வந்து
சொல்லும் போதும்
சீறிப் பாய்கிறேன்!

❀❀❀❀



சிவராத்திரிகளாய்
இரவுகளை ஆக்கி விட்டு
அவளின் நினைவலையில்
நீந்தி வருகிறேன்!



தலைமுடியும் தாடியும்
காடாகக் காட்சி தர
பைத்தியனாகவே
பாதையில் அலைகிறேன்!


❀❀❀❀



ஆம்...
பருவகால பைத்தியம்
பிடித்து விட்டது...
காதல்...


## கண்ணா நீ வருவாயா?

-கவிஞர் சிகண்டிதாசன்-




ஆண்டவர்கள் சீருடன் சொந்தமண்ணை
அன்றொரு சகுனியின் சூழ்ச்சியாலே
தீண்டாத சூதாட்டம் தீண்ட ஆடி
துணைவி யோடனைத்தையும் அடகுவைத்து
பூண்டார்கள் ஆறிரு ஆண்டினோடு
புன்மைசேர் அஞ்ஞாத வாச வாழ்வை
மீண்டவர்கள் தங்களது உரிமை கேட்க
மறுத்தனர் கௌரவர்கள் நீதி நல்க!

♦♦♦♦




பாண்டவர்கள் பாதியைக் கேட்டதாலே
மூண்டது பாரதப் போரே அன்று.
நீண்டதோர் இதிகாசக் கதையில் நீதி
நியாயத்தை நாட்டிட வேண்டி அந்தக்
கண்ணனே காரண கர்த்தாவாக
காண்டீபன் கடமையைத் துணிந்து செய்ய
எண்ணில்லாக் கருப் பொருள் ஞானமார்க்க
இனியநற் கீதையை உபதேசித்தான்.

♦♦♦♦



நடந்தது பாரதம் அந்தக் காலம்!
நமக்கிது பாடமா இந்தக்காலம்?
தொடர்ந்தது முடிவதாய் தெரிவதில்லை
துரியோதனர்களும் மடியவில்லை.
படர்ந்த தீ வீழ்ந்தோரை எரிக்கும் போது
பரந்தாமன் மௌனமாய் இருக்கலாமோ?
கடந்ததைக் கண்டவன் காக்கும் தெய்வம்
கடமையால் தர்மத்தை நாட்டுவோனோ?

♦♦♦♦



ஆண்டவன் பூமியில் எந்தநாளும்
ஏண்டவர் கொடுமைகள் அதிகரிக்க
மாண்டவர் கணக்கில்லாக் கதையிருக்க
மண்ணுக்காய்ப் போராடும் துயர வாழ்வில்
தூண்டுகோலாகவே இருப்போரிந்த
தேசத்தை நாசமாய் கெடுக்கும் போது
மீண்டும் நீ வருவாயா? கண்ணா எங்கள்
விடிவுக்கு வழி காட்ட விழித்தெழுந்து!

## தீபாவளி சிரிப்பு வெடிகள்

''அம்மா, அம்மா, தீபாவளி என்றால் என்னம்மா?
''கோழிவெட்டி, சாராயம் குடித்து அப்பா கூத்துக் காட்டுற திருநாள்!"

☺☺☺☺☺

''அம்மா, நீங்க தீபாவளிகுச் சுட்டதில ஒரு பலகாரத்த அப்பா அவசரமா வாங்கித்து வரட்டாம்!"
''ஏனாம்!"
''பெரிய வீட்டுக்குள்ள இருக்கிற மேசைக்கால் ஆடுதாம் அதற்கு ''அட" வைக்க!"

☺☺☺☺☺

''என்ன இது காலையில ஒரே சாராய நாற்றம்!"
''அது நான்தாண்டியம்மா நல்லெண்ணெய் போத்தலெண்டு சாராயப் போத்தல தலையில ஊத்தித் தேச்சிப் போட்டன்!"

☺☺☺☺☺

''அப்பா, இந்த முறை உங்களை அம்மா சேலை வாங்க வேண்டாமாம்!"
''இவளல்லவோ குடும்பப் பொறுப்புத் தெரிஞ்சவள்!"
''இல்லப்பா உங்களுக்கு ''செலெக்ட்" பண்ணத் தெரியாதாம், பணத்தத் தரட்டாம் அவவே பார்த்து வாக்குவாவாம்!"


☺☺☺☺☺


'பிள்ள மூத்தவள், எங்க இந்தப் பௌடர் ரின்னுக்குள்ள ஒண்டையும் காணல்ல?"
''அம்மா மாக்கோலம் போட்டிருக்காங்க.!"

☺☺☺☺☺

''தீபாவளியன்று நானும் என் மனைவியும் பாசிக்குடாவுக்கு பிக்னிக் போவதாக ஏற்பாடு!"
''ஏன்?"
''மாமா மாமி எல்லோரும் தீபாவளியன்று எங்க வீட்டுக்கு வருவதாகக் கடிதம் போட்டிருக்காங்க!"

☺☺☺☺☺





# உலக செய்திகள்

## அமெரிக்க காங்கிரஸ் தேர்தலில் இந்தியர் ஒருவர் வெற்றியீட்டியுள்ளார்.

(வொஷிங்டன்)

அமெரிக்க காங்கிரசுக்கு லூசியானா மாகாணத்தில் நடந்த தேர்தலில் குடியரசு கட்சி சார்பில் போட்டியிட்ட இந்தியர் பாபி ஜிந்தால் அமோக வெற்றி பெற்றார்.

அமெரிக்க காங்கிரசுக்கு லூசியானா மாகாணத்தில் தேர்தல் நடந்தது. இதில், மொத்தம் ஆறு வேட்பாளர்கள் போட்டியிட்டனர். அதில், குடியரசு கட்சி சார்பில் போட்டியிட்ட இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பாபி ஜிந்தால் வெற்றி பெற்றார். அவருக்கு இரண்டு லட்சத்து 13 ஆயிரத்து 618 வாக்குகள் கிடைத்தன. இது மொத்தம் பதிவான வாக்குகளில் 78 சதவீதம்.

பாபி ஜிந்தாலுக்கு அடுத்தபடியாக ஜனநாயகக் கட்சி வேட்பாளர்ராய் ஆம்ஸ்ட்ரோங் 18 ஆயிரத்து 531 வாக்குகள் மட்டுமே பெற்றார். இது மொத்தம் பதிவான வாக்குகளில் ஏழு சதவீதம் மட்டுமே. கடந்த ஆண்டு இதே தொகுதியில் ஆளுனர் பதவிக்கு பாபி ஜிந்தால் போட்டியிட்டார். ஜனநாயக கட்சி வேட்பாளர் கேதரின் பிளான்கோ விடம் தோல்வியை தழுவினார். இம்முறை காங்கிரஸ் உறுப்பினர் பதவிக்கு அமோக வெற்றி பெற்றார்.

## ஈராக்கிய படுகொலைகளுக்காக அமெரிக்காவை பழிவாங்குவேன்.

### -ஓசாமா எச்சரிக்கை-



(டுபாய்)

ஈராக்கில் நடந்த படுகொலைகளுக்காக அமெரிக்காவை பழிவாங்குவோம், என்று தீவிரவாதிகளின் இணையத்தில் வெளியான வீடியோ தொகுப்பில் பின்லாடன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அல்-குவைதா என்ற தீவிரவாத அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லாடன். அமெரிக்காவுக்கு சிம்ம சொப்பனமாக இருக்கும் ஒசாமா, ஒன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு முதல்முறையாக இணைய வீடியோ தொகுப்பில் தோன்றி பேசினார். தீவிரவாதிகளின் வழக்கமாக, இணையத்தளத்தில் கடந்த ஒக்டோபர் மாதம் 24ஆம் திகதியன்று, வீடியோ ஒளிநாடா ஒன்றை வெளியிட்டுள்ளார். 18 நிமிடங்கள் ஓடும் இந்த வீடியோ தொகுப்பின் ஒரு பகுதியை மட்டும், அல்ஜசீரா தொலைக்காட்சி கடந்த வாரம் ஒளி பரப்பியது. அதில் செப்டம்பர் 11 தாக்குதல் போல மீண்டும் ஒரு தாக்குதல் அமெரிக்கா மீது நடாத்தப்படும் என்று ஒசாமா எச்சரிக்கை விடுத்தார். இணையத்தளத்தில் ஒசாமா பின்லாடன் அமெரிக்காவுக்கு விடுத்துள்ள எச்சரிக்கை விவரம்: ஈராக் மீது தொடுக்கப்பட்டுள்ள போர் நியாயமற்றது.

இதற்கு எந்த முடிவும் ஏற்படப் போவதில்லை என்ற அறிவுரைகளை எல்லாம் அலட்சியம் செய்துவிட்டார் அதிபர் புஷ். ஈராக்கில் கிடைக்கும் கறுப்புத் தங்கம் என்றழைக்கப்படும் எண்ணெய் வளம், புஷ்ஷின் கண்களை குருடாக்கியது. அமெரிக்காவின் நலனைவிட அவரது சொந்த நலனில் அதிக ஆர்வம் காட்டினார். அதனால் போர் எழுந்தது. பலர் இறந்தனர். அமெரிக்க பணம் தாராளமாக செலவிடப்பட்டது.

ஈராக் போரில் மொத்தம் 15 ஆயிரம் ஈராக்கியர்கள் இறந்தனர். 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். அதே நேரத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த ஆயிரம் பேர் இறந்தனர். 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இரண்டு தரப்பிலும் இறந்தவர்களின் இரத்தங்களால், புஷ்ஷின் கை கறைபடிந்துள்ளது. எண்ணெய் வளத்திற்காகவும், தனது தனியார் நிறுவனங்களை மேம்படுத்தவுமே புஷ் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு செயலுக்கும், அதற்கு சமமான அளவில் பின் விளைவு இருக்கும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அமெரிக்காவை எதிர்த்து அல்-குவைதா போராடும். எதிர்தரப்பினர் தங்களது நிலையில் இருந்து விலகும்வரை போராட்டம் தொடரும். இவ்வாறு ஒசாமா வீடியோவில் எச்சரிக்கை விடுத்தார்.

### மக்கா செல்ல காத்திருப்பு

(ராய்ட்டர்)

மக்கா நகரத்திற்குச் செல்வதற்கு ஆயிரக்கணக்கான ஈராக்கிய யாத்திரிகர்கள் சவூதி அரேபிய பாலைவன எல்லையில் காத்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளது. கடந்த சில தினங்களாக எல்லைப்பகுதியில் காத்திருக்கும் இவர்களுக்கு போதிய உணவு வசதிகள் இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## பிரமோஸ் ஏவுகணை வெற்றிகரமாக ஏவப்பட்டது




(பாலாசூர்)

அதிநவீன சூப்பர் சொனிக் ஏவுகணையான பிரமோஸ் நேற்று முன்தினம் ஒரிசா மாநிலம் சந்திப்பூர் கடற்கரை அருகே கப்பலில் இருந்து ஏவி வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது. இந்திய ரஷ்ய கூட்டுத் தயாரிப்பில் உருவானது பிரமோஸ் அதிநவீன சூப்பர் சொனிக் ஏவுகணை. ஒன்பது மீற்றர் உயரம் கொண்ட இந்த ஏவுகணை 290 கிலோ மீற்றர் தூரம் வரை சென்று தாக்க வல்லது. ஒலியை விட இரண்டு மடங்கு வேகத்தில் சென்று தாக்கக் கூடியது. ஒரிசா மாநில சந்திப்பூர் கடற்கரை அருகே ஐ. என். எஸ். ரஜபுத் கப்பலில் இருந்து பிரமோஸ் ஏவுகணை நேற்று முன்தினம் வெற்றிகரமாக ஏவி சோதித்துப் பார்க்கப்பட்டது. இதற்கு முன்பாக கடந்த ஆண்டு நவம்பர் 23ஆம் திகதி சோதித்து பார்க்கப்பட்டது.

## சென்னையில் புதிய ஆளுனரை ஜெயலலிதா வரவேற்றார்



(சென்னை)

தமிழகத்தின் புதிய ஆளுனராக பொறுப்பேற்றுக் கொள்ள நேற்று முன்தினம் சென்னை வந்த சுர்ஜித்சிங் பர்னாலாவிற்கு சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது. முதல்வர் ஜெயலலிதா உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் அவரை வரவேற்றனர். தமிழக ஆளுனராக இருந்த ராம்மோகன ராவ் பதவி விலகியதைத் தொடர்ந்து புதிய ஆளுனராக பஞ்சாப்பைச் சேர்ந்த சுர்ஜித்சிங் பர்னாலா நியமிக்கப்பட்டார். பதவியில் இருந்து விலகிய ராம்மோகன ராவ் தனது குடும்பத்தாருடன் செவ்வாய் கிழமை மாலை ஐதராபாத் புறப்பட்டுச் சென்றார்.

அவரை முதல்வர் ஜெயலலிதா, அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் வழியனுப்பி வைத்தனர். புதிய ஆளுனராக நியமிக்கப்பட்டுள்ள சுர்ஜித்சிங் பர்னாலா, பதவி ஏற்றுக் கொள்வதற்காக தனி விமானம் மூலம் நேற்று முன்தினம் காலை சென்னை வந்தார். சென்னை விமான நிலையத்தில் அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க தமிழக அரசின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.


இதைத் தொடர்ந்து விமான நிலைய வளாகத்தில் அளிக்கப்பட்ட அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்ட சுர்ஜித்சிங் பர்னாலா, பின்னர் கிண்டி ராஜ்பவன் புறப்பட்டார்.

## ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி தேர்தலில் கர்சாய் அமோக வெற்றி பெற்றுள்ளார்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் ஹமீத் கர்சாய் 55. 4 சதவீத வாக்குகள் வீதம் பெற்று வெற்றி பெற்றார்.

தலிபான்களின் பிடியில் இருந்த ஆப்கானிஸ்தானை கடந்த 2001ம் ஆண்டு அமெரிக்கப் படைகள் விடுவித்தன. இதையடுத்து இடைக்கால அதிபராக ஹமீத் கர்சாய் பதவி வகித்து வந்தார். கடந்த மாதம் 9ஆம் திகதி முதன் முறையாக ஆப்கானிஸ்தானில் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடைபெற்றது.



இதில் தற்போதைய அதிபர் ஹமீத் கர்சாய்க்கும், முன்பு ரஷ்யா படையெடுத்த போது, அதை எதிர்த்து போராடிய தஜிக் படைபிரிவு இராணுவ யூனுஸ் குவானுனிக்கும் இடையில் நேரடி போட்டி நிலவியது. தேர்தலில் முறைகேடுகள் நடந்ததாக கூறி யூனுஸ் குவானுனியின் ஆதரவாளர்கள் ஆரம்பத்தில் வாக்கு எண்ணிக்கையைப் புறக்கணித்தனர்.

பின்னர் ஆப்கான் ஐ.நா., கூட்டுத் தேர்தல் ஆணைய அதிகாரிகள் மேற்கொண்ட சமாதானத்தை ஏற்று வாக்கு எண்ணிக்கை புறக்கணிப்பை யூனுஸ் வாபஸ் பெற்றார்.

இந்துகுஷ் மலைப் பகுதிகளில் பதிவான வாக்குப் பெட்டிகள் வந்து சேர கால தாமதமானது. இதனால் வாக்கு எண்ணிக்கை முடிவடைய பல நாட்கள் ஆயின. வாக்கு எண்ணிக்கை முடிந்து நேற்று முன்தினம் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. அதிபர் ஹமீத் கர்சாய் மொத்தம் 55. 4 சதவீத வாக்குகளை பெற்று வெற்றி பெற்றார். ஆப்கான் ஐ.நா., கூட்டுத் தேர்தல் நிர்வாகம் இதனை நேற்று முன்தினம்

## அமெரிக்காவின் ஜனாதிபதி தேர்தலில் புஷ் அமோக வெற்றி

(வொஷிங்டன்)

கடந்த 2ஆம் திகதி அமெரிக்காவில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில அதிபர் புஷ் வெற்றி பெற்றுள்ளார். இதன் மூலம் இன்னும் 04 வருடங்கள் தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவி வகிப்பார். 35 இலட்சம் பெரும்பான்மை வாக்குகளால் செனற்றர் ஜோன்கெரி அவர்களை தோற்கடித்த அதிபர் புஷ் நாட்டு மக்களுக்கு உரையாற்றுகையில் அமெரிக்கப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதோடு மக்களின் நம்பிக்கையையும் கட்டியெழுப்பப் போவதாகக் குறிப்பிட்டார். இந்



தத் தேர்தலில் அதிபர் புஷ் 53 சதவிகிதமான வாக்குகளையும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் செனற்றர் ஜோன்கெரி 48 சதவிகி தமான வாக்குகளையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### பாகிஸ்தான் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி; இருவர் படுகாயம்


(கராச்சி)

பாகிஸ்தானில் கராச்சி நகரில் மசூதி ஒன்றில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டார். இரண்டு பேர் படுகாயமடைந்தனர். கராச்சி நகரின் வடக்கு பகுதியில் சன்னி முஸ்லிம் பிரிவினரின் மசூதி உள்ளது. நேற்று முன்தினம் காலை இந்த மசூதியில் தொழுகை நடந்து கொண்டிருந்தது. அப்போது கைத்துப்பாக்கியுடன் நுழைந்த நபர் அங்கிருந்தவ ர்கள் மீது திடீரென துப்பாக்கிச் சூடு நடத்தினான். இதில் ஒருவர் கொல்லப்பட்டார். இது குறித்து நகர பொலிஸ் தலைவர் பியாஸ் லெகரி கூறியதாவது கராச்சியில் சன்னி மற்றும் ஷியா பிரிவு முஸ்லிம்கள் இடையே நடக்கும் கலவரத்தின் ஒரு பகுதியாக இந்த தாக்குதல் நடைபெறவில்லை.

# கடைசி டெஸ்ட் தொடரிலும் சோதனை மழை காரணமாக இந்திய ஆட்டம் தடை

(மும்பை)

இந்தியா-அவுஸ்ரேலியா அணிகள் மோதும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் பந்தயம் மும்பையில் நேற்று முன்தினம் தொடங்கியது. முன்னதாக நடந்த டெஸ்ட் போட்டிகளில் அவுஸ்ரேலியா 2-0 என்ற புள்ளியில் தொடரை கைப்பற்றி விட்டது. 35 ஆண்டுக்குப்பின்னர் அவுஸ்ரேலியாவுக்கு எதிராக சொந்த மண்ணில் இந்தியா



டெஸ்ட் தொடரை கோட்டைவிட்டது. இந்த நிலையில் மும்பையில் ஆறுதல் தேடிக்கொள்ள நினைத்த இந்தியாவுக்கு குறைந்த நேர ஆட்டத்தில் கூட சோதனைதான் ஏற்பட்டது.

காலை முதல் லேசான மழை பெய்து கொண்டிருந்த காரணத்தால் திட்டமிட்ட நேரத்துக்கு போட்டி தொடங்கவில்லை. மதியம் 12.30 மணிக்கு நடுவர்கள் மைதானத்தை பரிசோதித்தனர். இதன்பின்னர் 2 மணிக்கு ஆட்டம் தொடங்குவதாக அறிவித்தனர். இதன்படி ஆட்டம் சரியாக 2 மணிக்கு தொடங்கியது. அப்போது வெறும் 4 ஓவர்கள் மட்டுமே நடந்தது. இதன்பின்னர் மீண்டும் லேசான மழை பெய்தது. இதையடுத்து ஆட்டம் நிறுத்தப்பட்டது.

சிறிது நேரத்தில் மழை விட்டதை அடுத்து மாலையில் மீண்டும் ஆட்டம் தொடங்கியது. முதல்நாளில் 20 ஓவர்கள் வரை போட்டி நடத்த நடுவர்கள் முடிவு செய்து மின்னொளியில் ஆட்டம் தொடங்கியது. மேற்கொண்டு 7 ஓவர்கள் முடிந்த நிலையில் திடீரென வெளிச்சக்குறைவு ஏற்பட்டது. இதனால் வேறுவழியின்றி முதல்நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

இந்திய அணி நாணயச் சுழற்சியில் வென்று துடுபெடுத்தாடியது. 11 ஓவர்களில் இந்தியா 2 விக்கெட் இழப்புக்கு 22 ஓட்டம் பெற்றது. திராவிட் 9 ஓட்டமும், டெண்டுல்கர் 2 ஓட்டமும் எடுத்து ஆடிக்கொண்டு இருக்கிறார்கள். ஒருநாள் போட்டி நினைப்பில் அதிரடியாக ஓட்டம் எடுத்த ஷேவாக் 8 ஓட்டத்துடன் ஆடுகளத்தைவிட்டு வெளியேறினார். முதல் டெஸ்ட் போட்டியில் காலடி எடுத்து வைத்த கேம்பீர் 3 ஓட்டத்துடன் கில்லெஸ்பி வீச்சில் வீழ்ந்தார். கடந்த 4 ஆண்டுகளில் தொடக்க வீரர் பிரச்சினை இந்திய அணியை வாட்டி எடுக்கிறது. அந்த வகையில் கேம்பீர் 17-வது தொடக்க வீரராக பரிசோதிக்கப்படுகிறார் என்பது வேதனையான விஷயம்.

11 ஓட்டத்திலேயே இந்தியா 2 விக்கெட்டுகளை கோட்டைவிட்ட நிலையில் திராவிட் மற்றும் டெண்டுல்கர் ஆகியோர் மேற்கொண்டு விக்கெட் சரிவை தடுத்தனர். பயிற்சியின் போது ஏற்பட்ட காயம் காரணமாக வார்னே அணியில் இடம்பிடிக்கவில்லை. இவருக்குப்பதிலாக ஹவுரிட்ச் முதல் போட்டியில் ஆடினார். 19 வயதான விக்கெட் காப்பாளர் தினேஷ்கார்த்திக் மற்றும் கேம்பீர் ஆகியோர்களும் தங்கள் டெஸ்ட் வாழ்க்கையை தொடங்கினர். நாக்பூர் டெஸ்ட் போட்டியில் ஆடிய அகர்கர் இடத்தை ஹர்பஜன் பிடித்துள்ளார். இதனால் இந்திய அணி இந்தப் போட்டியில் 3 சுழ்ல்பந்து வீச்சாளர்களுடன் களம் இறங்கி உள்ளது. டெண்டுல்கர் தொடக்க பந்து வீச்சாளராக தனது பணியை செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




## பொலிஸ் விசாரணைக்குப் பயந்து போயோ இந்தியப்பயணத்தை கைவிட்டுள்ளார்

(புதுடெல்லி)

இந்திய பொலிஸ் விசாரணைக்கு பயந்து அணியில் இருந்து விலக போயோ முடிவு செய்துள்ளார்.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இந்த மாத இறுதியில் இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட் போட்டிகளில் மோத உள்ளது. இந்தப் போட்டிக்காக தென்னாபிரிக்கா அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விட்டது. கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு குரோனே தலைமையிலான தென்னாபிரிக்கா அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்தது. அப்போது குரோனே உள்ளிட்ட 4 தென்னாபிரிக்க வீரர்கள் சூதாட்ட குற்றச்சாட்டில் சிக்கினர். இது தொடர்பாக டெல்லி பொலிஸ் வழக்குப் பதிவு செய்துள்ளது.

குற்றச்சாட்டில் சம்பந்தப்பட்ட வீரர்களிடம் விசாரணை நடத்துவதற்குள் அவர்கள் சொந்த நாட்டுக்கு திரும்பிவிட்டனர். கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட விமான விபத்தில் குரோனே மரணம் அடைந்துவிட்டார். இதனால் அவர் மீதான விசாரணைகள் அனைத்தும் முடிவு கட்டப்பட்டு விட்டது. ஸ்டைர் டோம் எந்தவித சர்வதேச போட்டியிலும் ஆடவில்லை. எனவே அவரிடம் விசாரணை நடத்துவது முடியாத காரியம் ஆகிவிட்டது.

இதற்கிடையே சூதாட்ட குற்றச்சாட்டில் சிக்கிய கிப்ஸ் மற்றும் போயோ ஆகியோர் தென்னாபிரிக்க அணியின் முன்னணி வீரர்கள். டெல்லி பொலிஸ் விசாரணைக்குப் பயந்து இந்திய பயணத்தில் இருந்து கிப்ஸ் ஏற்கனவே விலகிவிட்டார். போயோ தென்னாபிரிக்கா அணியின் துணை தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். எனவே அவரிடம் கண்டிப்பாக விசாரணை நடத்தப்படும் என்று இந்திய பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது. இதை உறுதி செய்வதற்காக தென்னாபிரிக்கா தூதரக துணை அதிகாரி டெஸ் மான்ட் டெல்லி பொலிஸ் கமிஷனர் கே.கே.பாலை நேற்று முன்தினம் சந்தித்தார்.

இந்த சந்திப்பின்போது சூதாட்ட விசாரணை தொடர்பாக இருவரும் நீண்ட நேரம் விவாதித்தனர். அப்போது போயோ விவகாரம் குறித்தும் கேள்வி எழுந்துள்ளது. இதற்கு கே.கே.பால் பதில் அளிக்கையில்:- போயே கைது செய்யப்படமாட்டார் என்ற உறுதிமொழியை நான் கொடுக்க முடியாது என்றார். எனவே போயோ இந்தியா வந்தால் அவரை கைது செய்ய முழு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

# எங்கள் குரல்

## இடைநிறுத்தப்பட்ட ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு உரிய முறையில் வழங்கவேண்டும்

யுனிசெப் நிறுவனமும், கல்குடாக்கல்வி வலயமும் இணைந்து பாடசாலையை விட்டு இடைவிலகிய மணவர்களை இனம் கண்டு அவர்களை ஒன்றிணைத்து அவர்கள் இழந்த கல்வியை மீளப் பெறுவதற்குரிய நடவடிக்கையை முன்னெடுத்து அம்மாணவர்களுக்குக் கற்பிப்பதற்காக 20 ஆசிரியர்களையும் நியமித்தமை குறிப்பிடத்தக்கது.

இதனடிப்படையில் இடைவிலகிய மாணவர்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகள் 2004 ஆம் ஆண்டு ஜனவரியில் இருந்து இதனை செயற்படுத்தவும் செய்தனர்.

ஆனால் இந்த 20 ஆசிரியர்களுக்குப் பயிற்சியும் வழங்கிய நிலையிலேயே இவ் ஆசிரியர்கள் தமது கற்பித்தல் கடமைகளை செய்து வருகின்றனர்.

அத்துடன் இவ்வாசிரியர்களுக்குரிய சம்பளத்தை ஜனவரி தொடக்கம் மார்ச் மாதம் வரையுமாக 4500ரூபாயே இதுவரை வழங்கப்பட்டுள்ளது. இச்சம்பளம் மூன்று மாதம் கற்பித்ததற்குரியது என்றுதான் கூறவேண்டும்.

மார்ச் மாதத்திற்கு பின்பு தொடக்கம் இதுவரை இவ் ஆசிரியர்களுக்குரிய சம்பளம் வழங்கப்படவில்லை என இவ்வாசிரியர்கள் ஈழநாதமூடாக அறியத்தருகின்றார்கள்.

இது தொடர்பாக கல்குடா வலயக் கல்விப் பணிமனையில் இத்திட்டத்திற்கு பொறுப்பான அதிகாரிக்கும், வலயக்கல்விப் பணிப்பாளர் போன்றோருக்கும் அறிவித்துள்ளோம். ஆனால் இதுவரையும் இடைவிலகிய மாண வர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குரிய சம்பளம் வழங்கப்படவில்லை.

மேலும் இந்தச் சம்பள விடயம் தொடர்பாக யுனிசெப் நிறுவனப் பொறுப்பதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அதற்குரிய அனைத்து நிதிகளும் கல்குடா வலயக் கல்விப் பணிமனைக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அங்கு சென்று உங்களது சம்பளங்களைப் பெறலாம் எனவும் கூறினார்கள். என இவ் ஆசிரியர்கள் எங்கள் குரலுக்குத் தெரிவிக்கின்றனர்.

எனவே தயவு செய்து எங்களுக்குரிய 10 மாதத்துக்கான சம்பளங்களை விரைவில் தந்து உதவுமாறு வலயக் கல்விப் பணிப்பாளரை மிகவும் தாழ்மையுடன் ஈழநாதமூடாகக் கேட்டு நிற்கின்றோம்.

**ஆசிரியர்கள் சார்பாக**
**சண்முகம், நிர்மலா**

## மத்தியமுகாமில் மீள்குடியேறிய மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து தரவும்

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் எல்லைக் கிராமமாகவும் நாவிதன்வெளிப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளதுமான (மத்தியமுகாம்) 4 ஆம் கிராம மக்கள் குடியேற்றத் திட்டம் ஆரம்பகாலம் முதல் இன்று வரை வாழ்ந்து வருகின்றனர். ஆனால் இந்த மக்களின் தற்போதைய நிலையோ மிகவும் பரிதாபத்துக்குரியதாகிவிட்டது என்றுதான் கூற வேண்டும். காரணம் 1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்தம் காரணமாக இக்கிராமத்தைவிட்டு இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் அனைவரும் தமது உடமைகளை இழந்து அகதிகளாகி அகதிமுகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் இருந்துவிட்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் புறக்களும், புதர்களும் நிறைந்து சிறிலங்கா இராணுவத்தினரால் சின்னாபின்னமாக்கப்பட்ட தமது கிராமத்திற்கு மீண்டும் வந்து எதுவித அடிப்படை வசதியுமின்றி வாழ்கின்றனர். இவர்களின் அடிப்படை பிரச்சினைக்கு இதுவரை யாருமே தீர்வு பெற்றுத்தரவில்லை என்றும் ஈழநாதத்திற்குக் சுட்டிக்காட்டுகின்றனர்.

மத்தியமுகாம் மக்களின் துயரம் இதுதான் ''நாங்கள் தற்போது ஏற்பட்டுள்ள சுமூகமான நிலை காரணமாக எங்களது சொந்த ஊரில் வந்து தற்போது மீள் குடியேறியுள்ளோம். ஆனால் இதுவரையும் மீள்குடியேற்றத்திற்காக வேறு பகுதிகளில் கொடுக்கப்பட்டது போல் 25,000 ரூபா கொடுப்பனவு இதுவரை எங்களுக்கு வழங்கப்படவில்லை அத்துடன் சமுர்த்தி முத்திரையும் வழங்கப்படவில்லை.'' என்று மிகவும் மனவேதனையுடன் கூறினார்கள்.

இக்கிராமமானது கடந்த கால யுத்தம் காரணமாக கிழக்கு மாகாணத்திலே மிகவும் பாதிக்கப்பட்ட கிராமமாக இந்த மத்தியமுகாம் (4 ஆம் கிராமம்) விளங்குகின்றது. இங்கு சிறிலங்கா இராணுவத்தினரும், ஊர்காவல் படையினரும் இணைந்து நூற்றுக்கும் மேற்பட்ட மனிதப் படுகொலைகளையும், பாலியல்வன்புணர்வுகளிலும் ஈடுபட்டதுடன், சொத்துக்களையும் சூறையாடியதுடன் இக்கிராமத்தை விட்டே தமிழ் மக்களை விரட்டியடித்தனர். அப்படியிருந்தும் தற்போதைய அமைதி சூழலில் இம்மக்கள் மீண்டும் தமது சொந்தக் கிராமத்திற்கு வந்து மீளக் குடியேறியும் அரசு சார்ந்த, அரசு சார்பற்ற நிறுவனங்கள் கூட இம்மக்களின் சிறு தேவைகளைக்கூட பூர்த்தி செய்ய முன் வரவில்லை எனமிகவும் கவலையுடன் கூறுகின்றனர்.

இங்கு வாழும் மக்கள் பிற சமூகங்களால் சுற்றிவளைக்கப்பட்ட நிலையிலேயே தற்போது மீண்டும் இங்கு குடியேறியுள்ளனர். இம்மக்கள் இன்றும் பயம் பீதியுடனேயே இருக்கின்றனர். இக்கிராமத்திற்கு கிழக்கே முஸ்லிங்களும், மேற்கே சிங்கள மக்களும் செறிந்து வாழ்கின்றனர். இக்கிராமம் அம்பாறை மாவட்டத்திலே ஏனைய எல்லைக் கிராமங்களைவிட மிகவும் கேந்திர நிலையமாக அமைந்துள்ளதால் சிங்களப் பேரினவாதிகள் எப்போதும் இந்தக் கிராமத்தை ஆக்கிரமிப்பதிலேயே குறியாகச் செயற்படுகின்றனர்.

இந்த நிலையில் எதுவித அடிப்படை வசதியும் இம்மக்களுக்குச் செய்து கொடுக்கப்படாத நிலையிலும் பேரினவாதிகள் தமது கிராமத்தை ஆக்கிரமித்து விடக் கூடாது என்ற ஒரே நோக்கிலும் மீண்டும் தமது சொந்தக் கிராமத்திற்கு வந்து சிறு குடிசைகளை அமைத்து மீளக் குடியமர்ந்துள்ளனர் என்றுதான் கூற வேண்டும்.

எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இம் மத்தியமுகாம் மக்களின் அடிப்படை தேவைகளை அறிந்து அவற்றைப் பெறுவதற்குரிய வழிவகைகளைச் செய்து கொடுக்கவேண்டும் என எங்கள் குரலூடாக மத்தியமுகாம் மக்கள் சார்பாக வேண்டுகோள் விடுக்கின்றேன்.

அ.தர்மா

**அன்புடன் வாசகர் நெஞ்சங்களுக்கு!**

உங்கள் பிரதேசத்தில் அபிவிருத்தியில் பாரபட்சமா, புறக்கணிப்பா, ஊழல் மோசடிகளை ஈழநாதம் எங்கள் குரலுக்கு தகுந்த ஆதாரங்களுடன் அனுப்பிவையுங்கள் நிச்சயம் பிரசுரிப்போம்.

**அனுப்ப வேண்டிய முகவரி**
**எங்கள் குரல்**
**ஈழநாதம்**
**மட்டக்களப்பு பதிப்பு**
**பிரதான வீதி**
**கொக்கட்டிச்சோலை.**



## சிந்தனைக்கு!

நாம் ஒரு இலட்சிய விதையை விதைத்திருக்கின்றோம்., அதற்கு எமது வீரர்கள் இரத்தத்தைப் பாய்ச்சி வளர்க்கின்றோம். இந்த விதை வளர்ந்து விருச்சமாகி எமது மாவீரர்களின் கனவை நனவாக்கும்.

தமிழீழத் தேசியத் தலைவர்

ஈழநாதம்
மக்கள் தினசரி மட்டக்களப்பு பதிப்பு

பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.
மின்னஞ்சல் : batti@eezhanatham.com
தொலைபேசி : 065-2226110
தொலைநகல் : 065-2226303

05-11-2004

# இந்தியா மீள் பரிசீலனை செய்யவேண்டும்

சிறிலங்கா அரசும் - இந்தியாவும் செய்து கொள்ளப் போகும் பாதுகாப்பு உடன்படிக்கை. ஈழத்தமிழினத்திக்கு இந்தியா செய்யும் ஒருதுரோகத் தனமாகத்தான் கருதமுடியும். சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான ஒரு சூழலை எட்டுவதில் தற்போது இழுபறித்தன்மை காணப்படுகின்றது. இத்தகய ஒரு சூழலில் இந்தியாவுடன் சிறிலங்கா அரசு செய்து கொள்ளும் பாதுகாப்பு உடன்படிக்கைகுறித்து நாம் ஆழமாக சிந்திப்போம் சமாதானத்துக்கான பாதை தற்போது புதர் மண்டிக் கிடக்கிறது சர்வதேச சமூகம் மீளவும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என ஆழமாக வலியுறுத்தலை அரசதரப்புக்கு தெரிவித்துவரும் சூழலில்கூட ஏனோ தானோ என்ற ரீதியிலான போக்கையே அரசு கையாண்டு வருவது வேதனைக்குரியது.

இவை ஒருபுறமிருக்க சமாதானத்துக்கான சாத்தியமான அணுகுமுறைகளை அரசு கையாளாது போர்த் தளபாட இறக்குமதி கப்பல்கள் கொள்வனவு, படைபலப்படுத்தலுக்கான ஒப்பந்தங்கள் என போர்த்துறை சார்ந்த அணுகுமுறைகளில் ஜனாதிபதி அக்கறை காட்டுவது சமாதாணத்தின் மீது இந்த அரசுக்கும் ஜனாதிபதிக்கும் அக்கறை இல்லை என்பதை தெளிவாகக் காட்டுகிறது. மறுபுறம் இந்தியா ஈழத்தமிழ் மக்களின் பிரச்சனைக்கு தீர்வுகாணும் விடையத்தில் பாரபட்சமான அணுகுமுறைகளை கையாளுகின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் நடந்த ஆறு சுற்றுப் பேச்சுவாத்தைகளுடன் சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டுநிற்கின்றன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு ஆட்சிக்கு வந்ததிலிருநது இற்றவரை பேச்சுவாத்தையை மீண்டும் ஆரம்பிக்கும் அணுகுமுறைகளைக் கையளவில்லை

சர்வதேச சமூகம் பேச்சுவாத்தைகளை மீண்டும் ஆரம்பிக்கவேண்டும் என வலியுறுத்தும் போது அருகில் இருக்கும் இந்தியா- சிறிலங்கா அரசுக்கு எதுவிதமான அழுத்தங்களையும் பிரயோகிக்காது மௌனம் சாதித்து வரும் வேளை பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வது கவலைக்குரிய விடையம்.

சிறிலங்கா யாருக்காக ஆயுதங்களையும், கப்பல்களையும் வாங்கிக் குவிக்கிறது, யாருக்காக படைத்துறை ஒப்பந்தத்தைச் செய்து கொள்கிறது என்பதைச் சிந்திப்போமானால் தமது நாட்டின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் தமிழினத்தின் மீது ஏவி விடுவதற்கான போர்த்தளபாடங்களைத்தான் இந்தியாவிடம் இருந்து பெற்றுக் கொள்கின்றது.

இந்தியா- பாகிஸ்தான் போன்றோ சீனா - இந்தியா போன்றோ இஸ்ரேல் - பாலஸ்தீனம் போன்றோ அண்டை நாட்டுடனான பகைமை சிறிலங்காவுக்கு இல்லை என்பதும் உலக நாடுகள் சிறிலங்காவைத் தக்கி ஆக்கிரமிக்கும் என்ற வெளிநாட்டு ஆபத்துக்கள் இல்லாத நிலையில் ஆழும் தரப்பு போர் துறைசார்ந்த ஒப்பந்தத்தைச் செய்து கொள்வது சிறுபான்மை இனத்தின் விடுதலைப் போரை நலிவுறச் செய்யும் முயற்சியே என்பது தெளிவாகத் தெரிகிறது.

ஒரு சிறுபான்மை இனம் அதன் அரசியல் உரிமைக்காக சமாதானப் பேச்சுவாத்தை மூலம் தீர்வு காணுங்கள் என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருக்கும் வேளையில் இவ்வாறான ஒரு ஒப்பந்தம் தேவையா இது போர்நிறுத்த ஒப்பந்தத்தை நிட்சயம் பலவீனப் படுத்தும்.

எனவே இந்தியா அவசரப்பட்டு படைத்துறை ஒப்பந்தமொன்றைச் செய்து தமிழினத்துக்கு கரிபூசும் காரியங்களில் ஈடுபடாது யதார்த்தமான அணுகுமுறைகளை கையாண்டு மீள் பரிசீலினை செய்வது ஆரோக்கியமானதாக அமையும்.

# ஒஸ்லோ, டோக்கியோ பிரகடனங்கள் தமிழீழ விடுதலைப்புலிகளை கட்டுப்படுத்தாது!

## மதியுரைஞர் பாலசிங்கம்



(நமது நிருபர்)

நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவிலும், ஜப்பானிய தலைநகரான டோக்கியோவிலும் நிகழ்ந்த உதவி வழங்கும் நாடுகளின் மாநாடுகளும் அவற்றில் நிறைவேற்றிய பிரகடனங்களும் விடுதலைப் புலிகளை எந்தவகையிலும் கட்டுப்படுத்தாதென விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான திரு. அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

ஒஸ்லோ பிரகடனம் தொடர்பாக பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் வெளியிட்ட அறிக்கை தொடர்பாக கருத்துத் தெரிவித்த அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு உதவி வழங்கும் நாடுகள் ஆதரவு வழங்கலாம். சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஊடாக இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுமாறு இருதரப்பினரையும் ஊக்குவிக்கலாம்.

ஆனால் அரசியல் தீர்வு எவ்விதம் அமைய வேண்டுமென வரையறைகளை திணித்துவிட முடியாதென அவர் உறுதியாக தெரிவித்துள்ளார்.

டோக்கியோவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டை விடுதலைப் புலிகள் புறக்கணித்துள்ளனர். எனவே இந்த மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானங்களைக் கொண்ட பிரகடனம் விடுதலைப் புலிகளை கட்டுப்படுத்த முடியாது.

விடுதலைப் புலிகள் இயக்கம் மீது தனது யோசனைகளை பலவந்தமாக திணித்துவிடும் நோக்கத்துடன் சிறிலங்கா அரசு தனது தோழமை நாடுகளுடன் கூட்டுச் சேர்ந்து ஜப்பானின் தலைநகரான டோக்கியோவில் பல தீர்மானங்களை நிறைவேற்றியது.

சமாதான முயற்சியில் அந்நிய சக்திகள் அநாவசியமாக தலையிடுவதாக குற்றம் சுமத்தி டோக்கியோ பிரகனடத்தை ஏற்கனவே நாம் நிராகரித்துவிட்டோம்.

கடந்த வருடம் ஜூன் மாதம் 22ஆம் திகதி விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் விடுத்த அறிக்கையில், இலங்கையில் தலைதூக்கிய அரசியல் பொருளாதார நெருக்கடிகளை சமாளிக்க முடியாத நிலையில், சர்வதேச சதிவலைப் பின்னலுக்குள் சராணகதி அடைந்திருப்பதாக ரணில் விக்கிரமசிங்க அரசை கடுமையாக சாடியிருந்தது.

இதனால் மூன்றாம் தரப்பு அனுசரணையுடன் நிகழ்ந்துவந்த சமாதான முயற்சிகள் சர்வதேச மத்தியஸ்தத்திற்கு திசை திருப்பப்பட்டுள்ளதாக அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான திரு. அன்ரன் பாலசிங்கம் கூறியுள்ளார்.

கூட்டாட்சி முறையை ஆராய்ந்து பார்ப்பது என்ற தீர்மானம் தொடர்பாக குறிப்பிடும் ஒஸ்லோ பிரகடனம் எதுவுமில்லையென்பதை பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஒப்புக் கொண்டமை குறித்து அவரைப் பாராட்டியுள்ள திரு. அன்ரன் பாலசிங்கம்,

மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தையின் முடிவில் நோர்வே அரசாங்கம் வெளியிட்ட பத்திரிகை அறிக்கையிலேயே ஒரு பிரகடனமாக பெரிதுபடுத்தப்பட்டு வித்தியாசமான விளக்கங்களும் அளிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

2002ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் திகதி ஒஸ்லோவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின் போது ஒரு பிரகடனம் வெளியிடப்பட்டது. அதில் குறிப்பிடத்தக்கதாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இந்த பிரகடனம் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஆதரவு தெரிவித்ததுடன், வன்முறையைத் தவிர்த்து சமாதான வழிமூலம் அடிப்படைப் பிரச்சனைகளுக்கு தீர்வுகான ஒஸ்லோ, டோக்கியோ பிரகடனங்களையும் மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தையின் விபரங்களைக் கொண்ட பத்திரிகை அறிக்கையையும் அடிப்படையான ஆவணங்களாக முன்வைத்து இவற்றிலிருந்து அரசியல் தீர்வுக்காக கூட்டமைப்பு உருவாகி விட்டதென ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் வாதிடுவது அபத்தமானது. ஏற்றுக் கொள்ள முடியாதது.

உதவி வழங்கும் நாடுகளின் மாநாடுகள் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பிரகடனங்களின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்கான தீர்வின் வரையறைகளை முன்கூட்டியே நிச்சயித்துவிட முடியாது.

இனப்பிரச்சினையானது அந்நிய சக்திகளின் அழுத்தமும் தலையீடுமின்றி சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் பேசித்தீர்மானிக்க வேண்டிய தொன்றாகுமென விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியரும் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

# முத்தமிழ் விழாவும்; தேனகம் மலர் வெளியீடும்

(சி.பி.ஹரிச்சந்திரன்)

மட்டக்களப்பு மண்முனை வடக்கு கலாசார தேனகம் மலர் வெளியீடு 06.11.2004 சனிக்கிழமை மட்டக்களப்பு வின்சன் மகளிர் உயர்தர தேசியப் பாடசாலை மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு இடம் பெறவிருக்கின்றது.

மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் க.சி.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் பிரதம அதிதியாக மேலதியக அரசாங்க அதிபர் செ. புண்ணியமூர்த்தியும், போதனா வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் ம.தேவராஜன் அவர்களும் கலந்து கொள்ள இருக்கின்றார்கள்.

மக்கள் ரசனையும், தீவிரசாலை இலக்கிய முயற்சிகளும் என்ற தலைப்பில் உமாவரதராஜன் சிறப்புரையாற்றவிருக்கின்றார். வைத்தியத்துறைக்கு க.நடராஜாவும், ச. செல்லையாவும், இசைத்துறைக்காக வை.சியாமளாதேவியும், நாடகத்திற்காக நா.ஜோதிநாயகம் அவர்களும் கௌரவிக்கப்படவிருக்கின்றார்கள். வ.சிவசுப்பிரமணியம் அவர்கள் சிறப்பு விருந்து வழங்கி கௌரவிக்கப்படவிருக்கின்றார்கள்.கலை நிகழ்ச்சிகளில் கூத்து, கரகாட்டம், நாட்டார்பாடல் போன்ற நிகழ்ச்சிகளும் இடம் பெறவிருக்கின்றது.

# தொலைக்காட்சிக்கும், நூல்களுக்கும் என்ன வேறுபாடு?

## வலய நூலக விழாவில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சுகி விளக்கம்

(வி.ரி.சகாதேவராஜா)

''இன்று மாணவர் மத்தியில் வாசிப்பு பழக்கம் அருகிச் செல்வதற்குப் பிரதான காரணம் தொலைக்காட்சி, சினிமா ஆகும். தவிர்க்க முடியாத பொழுது போக்குச்சாதனமான தொலைக்காட்சி மாணவரைப் பொறுத்த வரையில் தவிர்க்க வேண்டிய சாதனமாக மாறியிருக்கிறது. அதற்கும் காரணம் தொலைக்காட்சி, நாடகம் என்பனவாகும்.

இவ்வாறு சம்மாந்துறை வலய மட்ட நூலக தின விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய சம்மாந்துறை வலய நூலக இணைப்பாளரும், பிரதிக் கல்விப் பணிப்பாளருமான ஆர். சுகிர்தராஜன் தெரிவித்தார்.

# குளங்கள் புனரமைப்பு விடயத்தில் ஜனாதிபதி கேள்வியெழுப்பியமை நியாயமானது

## -ஐ.தே.கட்சி தெரிவிப்பு-

(நமது நிருபர்)

ஆயிரம் குளங்களை அமைக்கும் திட்டத்தில் உண்மை நிலை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா கேள்வி எழுப்பியமை நியாயமானதென ஐக்கியதேசியக் கட்சி தெரிவித்துள்ளது. சம்பளம் எதனையும் பெறாத மக்களுக்கு சேவையாற்றுவதாக மக்கள் விடுதலை முன்னணி வாக்குறுதியளித்திருந்தது. எனினும் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வைபவங்களுக்குச் செல்லும் போது அதற்குரிய எரிபொருள் செலவைக் கூட விவசாயிகளிடம் இருந்து பெற்றுக் கொள்வதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அமீர் ஹாசின் தெரிவித்துள்ளார்.

மாவனெல்ல ஹனதெனிய கால்வாய் திறப்பு விழா வைபவத்தில் கலந்து கொண்ட மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் இவ்வாறு பணம் பெற்றுக் கொண்டதாக அவர் குறிப்பிட்டார். இதற்குரிய எழுத்து மூலமான ஆதாரம் தம்மிடம் இருப்பதாகவும் அவர்கூறினார். இந்த நிகழ்வுக்கான செலவை விவசாயச் சங்கங்கள் வழங்கவேண்டுமென பிரதேச கமநல சேவைகள் உத்தியோகஸ்தர் உத்தர விட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்
Eezhanatham

# வட கிழக்கு ஆசிரியரின் சம்பள நிலுவை 32 கோடி ரூபா திறைசேரி வழங்க இணங்கிருப்பதோ 10 கோடி ரூபா

## மீதியையும் வழங்க ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

(வி.ரி.சகாதேவராஜா)

**"வடக்கு கிழக்கு மாகா ண ஆசிரியர்களின் சம்பள நிலு வைகளுக்காக எமது சங்கம் 32 கோடி 50 லட்சம் ரூபாவை கடந்த 14ம் திகதி சந்திப்பில் கோரியிருந்தது. ஆனால் திறைசேரியின் நிதி ஆணை க்குழு ஆக 10 கோடி ரூபாவுக்கு மட்டுமே கட்டுநிதி அனுப்ப இண ங்கியிருப்பதாக தெரிகிறது. எனவே வடகிழக்கு ஆசிரியரை ஏமாற்றாமல் மீதிக் தொகையையும் வழங்க நடவ டிக்கை எடுக்குமாறு வேண்டுகி றோம்"**

இவ்வாறு இன்று வெள்ளிக்கிழமை இசுருபாயவில் நடைபெறும் கல்வியமைச்சுடனான சந்திப்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுக்கவிருக்கிறது.

தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் இது தொடர்பாக மேலும் கூறியதாவது:-

வடகிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவைகள் பல வருடங்களாக வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது.

நாம் கடந்த 14ம் திகதி கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி தாராடிமெல்லைச் சந்தித்து கலந்துரையாடிய போது மேற்படி சம்பள நிலுவைக்கு 32 கோடி 50 லட்ச ரூபா தேவை. அவை உடனடியாக வழங்கப்பட வேண்டுமெனக் கோரினோம்.

அவரும் பதிலுக்கு திறைசேரியிடம் பேசி நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

உறுதியளித்தப்படி அவர் துரிதமாகச் செயற்பட்டதன் பலனாக திறைசேரி முதற்கட்டமாக 10 கோடி ரூபாவை அனுப்ப அறிவித்தல் வழங்கியுள்ளது. அதாவது வட. கிழக்குக்கு மாகாண திறைசேரியின் பிரதம கணக்காளர் எஸ். மகாலிங்கத்திடம் இதற்கான கட்டுநிதி டிசம்பருக்கு முன்னர் அனுப்பப்படுமென கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

அவர் எமது கல்வியமைச்சின் பிரதம கணக்காளர் ஜே.ஆர். புவிராஜக்கும் அறிவித்துள்ளார்.

# காத்தான்குடியில் இரு பள்ளி வாயல்களில் 786 குடும்பங்கள் தஞ்சம்

(நமது நிருபர்)

காத்தான்குடி மெய்ஞான பேரவைக்கு சொந்தமான பள்ளி வாயல்கள் இரண்டில் 768 குடும்பங்கள் அச்சம் காரணமாக தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களை நேற்று ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் சென்று பார்வையிட்டதுடன் உணவு சமைப்பதற்கான பாத்திரங்கள் வழங்கினர்.

மேலும் சில அரசசார்பற்ற நிறுவனங்களும் சென்று பார்வையிட்டனர்.

இதேவேளை நேற்றுக் காலை காத்தான்குடியில் வர்த்தக நிலையங்கள் திறந்த போதும் திடீர் என விடுக்கப்பட்ட அறிவித்தலையடுத்து கடைகள் இழுத்து மூடப்பட்டன.

# விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள இராணுவ உளவாளியை மன்றில் ஆஜர்படுத்தவில்லை!

(நமது நிருபர்)

பொலனறுவை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இராணுவ உளவாளியொருவர் நேற்று மூன்றாவது தவணையின் போதும் மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை.

சுப்பிரமணியம் யோகநாதன் (கொல்லப்பட்ட புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த நிதியின் தம்பி) என்ற இந்நபர் கடந்த ஆகஸ்ட் மாதம் 26ஆம் திகதி மட்டக்களப்பு புதுநகரில் வைத்து கைக்குண்டுடன் பொலிசாரால் கைது செய்யப்பட்டு பாதுகாப்பின் நிமித்தம் பொலன்னறுவைச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நீதிமன்ற உத்தரவின் பேரில் இரண்டு வாரங்களுக்கொரு தடவை மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட வேண்டிய இவர், இன்றைய தவணையின் போது மூன்றாவது தடவையாகவும் ஆஜர்படுத்தப் படவில்லை.

பாதுகாப்பு காரணங்களுக்காக இவரை அழைத்துவர முடியாதிருப்பதாக சிறைச்சாலை அத்தியட்சகர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையையடுத்து எதிர்வரும் 18ஆம் திகதி இவரை ஆஜர்படுத்துமாறு நீதிபதி எம்.எச்.எம்.அஜ்மீர் உத்தரவிட்டார்.

**செங்கலடி...**

குள் இருந்தவாறு கிரனைட்டை வீசி துப்பாக்கிப் பிரயோகமும் செய்ததாக ஈ.பி.டி.பி. ஏறாவூர் பொலிசில் புகார் செய்துள்ளது.

இந்த நபர் பஸ்சை விட்டு இறங்கி தப்பிச் சென்றுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. வீசப்பட்ட கிரனைட் அலுவலகத்திற்கு வெளியே விழுந்து வெடித்தமையினால் சேதங்கள் எதுவும் எவருக்கும் இல்லை.

**பிரான்ஸ்...**

75 வயதான யாசர் அராபாத் கடந்த 24 மணிநேரத்தில் ஏற்கனவே இரு தடவை சுயநினைவை இழந்து பின்னர் உணர்வு பெற்றதாகவும், தற்போது மூன்றாவது தடவையாகவும் சுயநினைவை இழந்துள்ளதாகவும் அல்-ஜசீரா தொலைக் காட்சி அறிவித்துள்ளது.

நேற்று பலமுறை அவர் வாந்தியெடுத்ததாகவும், அதனைத் தொடர்ந்து அவரது உடல்நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# வங்காள விரிகுடாவில் வானிலை குழப்பம், இடியுடன் கூடிய மழை

(நமது நிருபர்)

தற்போது வங்காள விரிகுடாக் கடல் பகுதியில் வானிலைக் குழப்பம் ஒன்று தோன்றியுள்ளது. இதன் தாக்கத்தினால் மழை அல்லது இடியுடன் கூடிய மழை நாட்டின் எல்லாப் பகுதியிலும் காணப்படும். என மட்டக்களப்பு வானிலை ஆராச்சி நிலைய பொறுப்பதிகாரி கே. சூரியகுமார் ஈழநாதத்திற்கு தெரிவித்தர்.

அவர் வானிலை முன்னறிவித்தலில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

வடக்குக் கிழக்கு மற்றும் வடமேற்கு பிராந்தியங்களில் அதிகளவு மழை காணப்படும்.

அதேவேளை காங்கேசன்துறை முதல் மட்டக்களப்பிற் கூடான அம்பாந்தோட்டை வரையுற்ற கடல் பிராந்தியங்களில் சற்றக் கொந்தளிப்பாகக் காணப்படும்.

நேற்று இரவு 9.00 மணி முதல் இன்று பிற்பகல் 3.00 மணி வரையுள்ள 18 மணித்தியாலங்களில் 77.9 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

**கிழக்கு..**

ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு நாட்களும் நடைபெறவுள்ளதாக கிழக்கு பல்கலைக்கழக பதிவாளர் ஏ.டி. ஹரிஸ் தெரிவித்துள்ளார்.

நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு தமிழ் (302), பி.ப.1.00 மணிக்கு ஆங்கிலமும் (302), பி.ப. 3.00 மணிக்கு ஆங்கிலம் (202) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு இணைந்த பாடநெறியும் நடைபெறவுள்ளது.

**மட்.இந்து...**

இவர் மட்டக்களப்பிலுள்ள அவரது உறவினர் வீட்டிலிருந்து கல்விக் கற்றுவருவதாகவும் புதன் கிழமை பாடசாலைக்குச் சென்ற மாணவன் வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இறுதியாக வெள்ளை சீருடை அணிந்திருந்த இம்மாணவன் தொடர்பான தகவல் அறிந்தவர்கள் சூரியதாஸ், பான்சாலை வீதி, விஜயபுரம், மட்டக்களப்பு அல்லது ஈழநாதம் பணிமனைக்கு அல்லது 065-2225853 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அறியத் தருமாறு கோரியுள்ளனர்.

# நீர்கொழும்பு பிரதேசத்தில் தமிழ் இளைஞர் சுட்டுக்கொலை!

(நமது நிருபர்)

நீர்கொழும்பு நகரையண்டிய பிரதேசத்தில் நேற்றிரவு காரைநகர் வாசியொருவர் இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இவர் காரைநகர் தோப்புக் காட்டைச் சேர்ந்த 28 வயதுடைய குமாரவேல் பத்மகுமார் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மத்திய கிழக்கு நாடொன்றில் தொழில் புரிந்து திரும்பியிருந்த இவர் மேசன் தொழிலை செய்து வந்தார். நீண்ட காலமாக நீர்கொழும்பு முனைக்கரையில் வசித்து வரும் இவர் நேற்றிரவு மதுபான நிலையமொன்றிற்கு அருகில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

தலையிலும் நெஞ்சிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன. 9 எம்.எம். ரகைத் துப்பாக்கியினால் சுடப்பட்டுள்ளார்.

# விவசாயக் கம்பனிக்கு போட்டோ பிரதி இயந்திரம்

(சுவேந்திரா)

தம்பிலுவில் பிரதேசத்தின் விவசாய கம்பனியின் பொருளாதாரத்தை மேம்படுத்த போட்டோ பிரதி இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்துள்ளதோடு இதன் மூலம் கம்பனிக்கு இலாபத்தை தேடித்தரும் பணிகள் இடம்பெறும் என கம்பனியின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# இப்தார் நிகழ்வு

(நமது நிருபர்)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் காத்தான்குடி அமைப்பாளர் மர்சூக் அகமட் லெவ்வை தலைமையில் காத்தான்குடி பல நோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இன்று இப்தார் புனித நோம்பு நாளும், கலந்துரையாடல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

# முஸ்லிம்களுடன் பேச வேண்டும்

முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகளை கவனத்தில் கொண்டு சிறிலங்கா அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் தீர்வு யோசனையொன்றை முன்வைப்பார்களானால் முஸ்லிம்களுக்கு தனித்தரப்பு என்ற கோரிக்கைக்கு இடமிராது பிரதியமைச்சர் சேகு இஸ்த்தீன் தெரிவிக்கின்றார்.

**காத்தான்குடியில்...**

களில் சுமுகமான முன்னேற்றம் ஏற்பட்டதா என்பது குறித்து செய்தி அச்சுக்கு போகும்வரை எதுவித தகவலுமில்லை.

இதேவேளை ஜம்மியத்துல் உலைமா சபையின் செயலாளர் ஆ.சி. மௌலவி விடுத்த அறிக்கையில் தாங்கள் இப்பிரச்சினையை தீர்க் கமாக தீர்ப்பதற்கு முடியுமானவரை அப்துல் ரவூப் மௌலவிக்கு வேண்டிய சகல வழிகளில் நாங்கள் உதவி வழங்க தயாராகவுள்ளோம்.

எனவே அவர் விட்டுக் கொடுக்கின்ற ஒரு மனத்த ன்மையை காட்டவேண்டும் என்றார்.

எனினும் நேற்றைய தினமும் காத்தான்குடியில் பதட்டம் நீடிக்கிறது.

**பாதுகாப்பு...**

கைச்சாத்திடப்படவுள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த உடன்படிக்கை எப்போது கைச்சாத்திடப்படுவது தொடர்பாக உடனடியாக அறிய முடியவில்லை.

இதேவேளை, மீன்பிடி, இருநாடுகளுக்குமான கடனுதவி மீளாய்வு, கப்பல் போக்குவரத்து, சேதுசமுத்திரத் திட்டம் குறித்தும் இருதரப்பும் ஆராய்ந்ததாக தெரியவருகிறது.

இதேவேளை இந்திய ஜனாதிபதி, இந்திய படைத்துறை அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் சோனியாகாந்தி மற்றும் பாதுகாப்பு அமைச் சரையும் சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க சந்தித்து பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

# அமெரிக்க பிரதி இராஜாங்க செயலர் கொழும்பு வருகை திடீர் ரத்து

(நமது நிருபர்)

அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளர் ரிச்சர்ட் ஆர்மிட்ரேஜின் சிறிலங்காவுக்கான விஜயம் இரத்து செய்யப்பட்டுள்ளது.

தவிர்க்க முடியாத காரணங்களினால் அவரது பயணத்திட்டம் மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவர் சிறிலங்காவில் எதிர்வரும் 8ஆம் திகதி ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்த திட்டமிட்டிருந்தாரென, சிறிலங்காவுக்கான அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இலங்கை...**

சமும் ஏற்படுகின்றது. இந்நிலையில் 50 வருடகால வரலாற்றைக் கொண்டுள்ள சிறுபான்மை மக்களின் போராட்டத்தை இந்திய அரசாங்கம் கவனத்தில் எடுக்கவில்லையோ என்று அர்த்தமாகி விடக்கூடாதென குறிப்பிட்டுள்ள பெரியசாமி சந்திரசேகரன், சமாதானம் முறிவடைந்து யுத்தம் ஒன்று தோன்றி விடக்கூடாதென்று ஆதங்கப்பட்டுக் கொண்டிருக்கும் அனைத்து மக்கள் மத்தியிலும் இந்த பாதுகாப்பு ஒப்பந்தம் பயங்கர அச்ச உணர்வையே ஏற்படுத்துமெனவும் தெரிவித்துள்ளார்.

எனினும் இலங்கை சிறுபான்மை மக்களின் மீது முழுமையாக அக்கறை காட்ட வேண்டிய இந்தியா இம்மக்களின் உணர்வுகளை எந்த வகையிலும் அலட்சியம் செய்யக்கூடாதென மலையக மக்கள் முன்னணி அவா கொண்டுள்ளதாகவும், இலங்கை சிறுபான்மை மக்களின் பிரச்சினையில், குறிப்பாக இந்திய வம்சாவளி மலையக மக்களின் பிரச்சினையிலும் இந்தியா தற்போதைய சமாதான நகர்வுகளுக்கேற்ப முடிவுகளை எடுக்க வேண்டுமென மலையக மக்கள் முன்னணி இந்திய அரசாங்கத்தை வேண்டுகின்றது என்றும் முன்னணியின் தலைவர் பெரியசாமி சந்திரசேகரன் மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தில் 05. 11. 2004 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.